1089

உ

மனமோகினி

ஓர் மாதாந்தச் சஞ்சிகை

(முதல்தர நாவல்கள்)

தொகுதி 2.] 1923ஸு ஜூலை மீ 1உ [பகுதி 6

இதில் வெளிவரும் "பவளத்தீவு" அல்லது
"குடும்பசாபம்" யென்னும் நாவல்.

ஸ்ரீமான்
ஆரணி-குப்புசாமி முதலியார் அவர்களால்
இயற்றப்பட்டது

20 AUG 1923
MADRAS

"ஆனந்தபோதினி" பத்திராதிபர்
நா. முனிசாமி முதலியாரால்
பிரசுரிக்கப்பட்டது

1923

ரிஜிஸ்டர்ட்] [காபிரைட்.

மனமோகினி

ஓர் மாதாந்த சஞ்சிகை.

இதில் இனிய நாவல்களே வெளிவரும். நமது "ஆனந்த போதினிச்" சந்தாதாரர்களிற் பலர் அச்சஞ்சிகையில், ஒவ்வொரு நாவலும் சிற்சில சஞ்சிகைகளில் விரைவில் முடிவு பெறும்படி, சில நாவல்களை வெளிப்படுத்தி வரவேண்டுமென்று அடிக்கடி கேட்டு வருகின்றார்கள். அச்சஞ்சிகை பற்பல விஷயங்களுக்கும் இடந் தரவேண்டியதாயிருத்தலின், அதில் ஒவ்வொரு மாதத்திற்கும் இரண்டு மூன்று பக்கங்களே நாவல் வெளியிடக்கூடியதாயிருக்கிறது. அதனால் நம் நண்பர்களின் விருப்பம் நிறைவேறக் கூடாததாகிறது. ஆதலின் நாவலுக்கென்றே ஒரு சஞ்சிகையை வெளிப்படுத்தி வந்தால், அது மேற்கூறியவர்களின் விருப்பத்தைப் பூர்த்தி செய்வதோடு மற்றைய தமிழபிமானிகட்கும் திருப்தி யளிக்கக் கூடியதாயிருக்குமென்று இதனை 1922௵ பிப்ரவரி௴ 1௳ முதல் ஆரம்பித்தோம். இதில் ஒவ்வொரு பெரிய நாவல் தொடர்ச்சியாக வந்து ஆறு மாதங்களுக்கொரு முறை ஒவ்வொரு முழுப் புத்தகம் முடிவுபெறும். ஒரு வருஷத்துக்கு ஐந்து ரூபா விலை மதிப்புள்ள இரண்டு புத்தகங்கள் பைண்டாகிவிடும். இப்போது மகா அற்புதம் பொருந்திய அநேகம் நாவல்களின் ஆசிரியரான ஸ்ரீமான் ஆரணி குப்புசாமி முதலியாரவர்களால் இயற்றப்பட்ட "அமராவதி" என்னும் நாவல் முதலில் வெளியாகி முடிந்தது. இச்சஞ்சிகை கிரௌன் 80-பக்கங் கொண்டது. வருஷ சந்தா ரூ. 2-8-0 இரண்டரைதான். வெளிநாட்டிற்கு 3—0—0. 1923௵ மார்ச்சு௴ 1௳ முதல் இதே நூலாசிரியரால் வரையப்பட்ட "பவழத்தீவு" அல்லது "குடும்ப சாபம்" என்ற மிக்க அதிசயமான நாவல் தொடங்கி, வெளியாகி வருகிறது. அடியிற்கண்ட விலாசத்திற்கு உடனே எழுதி வெளியாகியுள்ள சஞ்சிகைகளை வி-பி-யிலோ முன் பணம் அனுப்பியோ பெற்றுக் கொள்ளுங்கள்.

☞ முன் பணம் அனுப்பினால் 2—8—0யும், மணியார்டர் கமிஷன் 1-அணாவுமாகும். வி-பி-யில் ரூபா 2—13—0 ஆகும்.

இது அநேக நாவல்கள் இயற்றிய ஸ்ரீமான் ஆரணி குப்புசாமி முதலியார் அவர்களால் எழுதப்பட்டது. அவருடைய நாவலின் போக்கு எல்லோருக்குந் தெரிந்திருக்குமாகையால் மாதிரி காப்பி அனுப்பப்படமாட்டாது.

மானேஜர்: "ஆனந்த நிலையம்"

நெ. 6, வெங்கடேச மேஸ்திரி வீதி, மதராஸ்.

பவளத்தீவு

அல்லது

குடும்பசாபம்

20 AUG 1923
MADRAS

இஃது

ஸ்ரீமான் ஆரணி-குப்புசாமி முதலியார்

அவர்களால் எழுதப்பட்டு

186491.
தமிழ்நாடு ஆவணக் காப்பக நூலகம்
186491
சென்னை-600 008

"ஆனந்தபோதினி" பத்திராதிபர்
நா. முனிசாமி முதலியாரவர்களால்
வெளியிடப்பெற்றது

1923

காபிரைட்-ரிஜிஸ்டர்ட்] [விலை ரூ. 1-6-0.

மந்திரிகளையும், பிரதானிகள், மதத்தலைவர்கள், முக்கிய மான பிரபுக்கள் யாவரையும் அழைத்து அவர்கள் முன் னிலையில் உன் கரத்தைப்பற்றி யுன்னை யழைத்துக் கொண்டுபோய் அவர்கள் முன்பாக நின்று 'இதோ பாருங்கள் என்மனப் பிரியப்படி நான் மணம்புரிந்து கொள்ளப்போகும் கணவன்' என்று கூறுவேன். அதுவே என் ஆயுள் காலத்தில் மிக்க சந்தோஷமான காலம்'' என்றாள்.

இராகவன்:—"ஆ! என்மேல் உனக்கிருக்கும் காதல் உண்மையில் அவ்வளவு உறுதியானதா?'' என்றான்.

இராணி:—"ஓ! என்காதலின் உறுதியை நீயறியவில்லை. அதுதான் எனக்குச் சந்தோஷமான காலம், எது வெனில் எப்போது 'ஓ என் அரியகாதலரே. நீர் இந்த இராஜ்ஜியத்திற்கு அரசனாய்விட்டீர்' என்று கூறுவேனே அக்காலம்'' என்றாள்.

இராணி யவ்வாறு கூறி வாய் மூடுமுன் கதவுதிடீ ரென்று திறக்கப்பட்டது. அங்கு தோன்றிய காட்சியைக் கண்டதே இராகவன் ஆ! என்று சத்தமிட்டுப் பிரமித்து நின்று விட்டான். இராணி, குற்றமுள்ள நெஞ்சுடைய வள், கோவென் றலறியதும் பூமியில் வீழ்ந்து ஸ்மரணை யற்று மூர்ச்சையடைந்து விட்டாள்.

அவர்கள் அவ்வாறு மனக்கலக்க மடைந்தது ஆச் சரியமல்ல. ஏனெனில், அறையின் வாயிற்படியில் ஒரு உருவம் வந்து நின்றது. அந்த உருவம் பூரணக்கவசம் அணிந்து, முகமூடியு மணிந்துகொண்டு கையில் ஒரு வாளைப் பிடித்துக்கொண் டிருந்தது. அதன் சிரசில் அர சர் அணியும் முடியிருந்தது. அதில் இறகுகள் சொருகப் பட்டிருந்தன. இதனுலெல்லாம் அவர்கட்கு அவ்வளவு பயம் உண்டாகாது. அக்கவசம் அரண்மனையில் யுத்தா

யுதங்கள், இறந்த அரசர்களுடையகவசங்கள் முதலியவை வைக்கப்பட் டிருக்கும் மேடையி லிருந்தது. அதோடு அக்கவசம் ஜீவரத்னம் இராணியின் பெரியதந்தையாகிய காலஞ்சென்ற இரணவீர கேசரி அரசன் யுத்தத்திற்குச் சென்றுகொண் டிருந்த காலத்தில் அணிந்து கொண் டிருந்த கவசம்.

ஆகையால் இராணி தான் இராகவனைச் சிம்மாத னத்தில் உட்காரவைக்கத் துணிந்ததற்காகத் தன் பெரிய தந்தையின் ஆவேசமே அதைப்பற்றிக் கண்டிக்க நேராய் வந்து விட்டதாகக் கருதியே அவ்வாறு திகிலடைந்து மூர்ச்சை யடைந்து விட்டாள்.

அந்த உருவம் பயமுறுத்துவதுபோல் இவர்களை நோக்கித்தான் வலதுகரத்தை நீட்டிக்கொண் டிருந்தது. இராணி ஸ்மரணையற்றுச் சவம்போல் கீழே ஜமக்காளத் தின்மேல் வீழ்ந்து கிடக்க, இராகவன் தான் நின்றவிடத் தில் மரம்போல் அசைவற்று மிக்க மிரட்சியோடு அந்த உருவத்தைப் பார்த்துக் கொண்டே யிருந்தான். திடீ லென்று அவன் கண்கள் இருண்டன. அவன்மனம் ஒரு விதப் பீதியடைந்தது. அவனால் சமாளிக்க முடியாமல் கீழே வீழுந்துவிடவே யிருந்தான். ஆனால் அச்சமயம் அறையின் கதவு தடாலென்று மூடப்பட்டதைக் கேட் டதே திடுக்கிட்டு நிமிர்ந்து பார்த்து உடனே தன் கண் களைத் துடைத்துக்கொண்டு வாயிற்படியை நோக்கினான். அந்த உருவம் அங்கில்லை. உடனே அவனுடைய பயம் நீங்கியது. அது நீங்கியதே ஒரு சந்தேகம் உண்டாயிற்று. அதாவது யாரோ கவசத்தை யணிந்து கொண்டு வந்து நம்மை யிவ்வாறு ஏமாற்றினார்கள் என்று கருதியதும் தன் உடைவாளைப் பாதி யுருவிக்கொண்டு பாய்ந்து ஓட முயன்றான். மறு நிமிடம் அங்கு சவம்போல விழுந்து

கிடக்கும் இராணியைக் கண்டதும் பயமடைந்து குனிந்து பார்த்து, இருதயத் துடிப்பிருப்பதை யுணர்ந்து அங்கிருந்த ஜலத்தை யெடுத்து அவள் முகத்திற்றெளித்தான்.

சற்று நேரத்தில் இராணி கண்களை மெதுவாய்த் திறந்து அலறினள். இராகவன் அவளுக்குத்தேறுதல் கூறியும் அவள் மனோவேதனை நீங்காமல் "அந்தோ தெய்வமே! அந்த ஆவேசம் போய்விட்டதா?" என்று கதவின்பக்கம் நோக்கினள். இராகவன் "அது இல்லை. அது உண்மையான உருவமல்ல. கலவரத்தால் உண்டான பொய்த்தோற்றம்" என்றான். இராணி என்னமோ சிந்தித்துக்கொண்டு சற்று தைரியத்தோ டெழுந்து சென்று கதவைத்திறந்து அங்கிருந்த ஜமக்காளத்தைக் குனிந்து பார்த்தாள். அதில் பதிந்திருந்த கவசமணிந்த பாதங்களின் அடையாளங்களைக் கண்டதும் "அய்யோ! இதோ பார் இது பொய்யல்ல. மெய்யே!" என்று வீறிட்டலறினள். அக்குறிகளினலேயே இராகவன் "யாரோ நம்மை யேமாற்றவே யிப்படிச் செய்திருக்கிறார்கள் என்று தீர்மானித்துக் கொண்டு, "இன்னும் சமயம் மிஞ்சிவிடவில்லை. அவன் இதற்குள் வெளித்தாண்டிவிட முடியாது. அப்படிப்பட்ட துஷ்டனைப் பிடித்துத் தக்கபடி தண்டிக்க வேண்டும்" என்று கூறிக்கொண்டே துரிதமாய் ஆயுதசாலையிருக்கும் திக்கைநோக்கிச் செல்ல அடியெடுத்து வைத்தான். இராணி அவனைப் பற்றிக்கொண்டு "ஐயோ! நீ போகவேண்டாம். போகவேண்டாம். அப்படிச்செல்வதாயின் நானும் கூடவருகிறேன்" என்றாள்

அவ்வாறே இராணி அவன்தோளைப்பற்றிக்கொண்டு கூடவே சென்றாள். இருவரும் ஒரு நீண்டவழியே நெடுந்தூரம் சென்று அதன் கோடியிலிருந்த கதவைத்திறந்தார்கள். அங்கு கீழ்நோக்கிச் செல்லும் படிகள் இருந்தன.

அவ்வழியே யிறங்கி அடியிற் சென்று அங்கிருந்த மடிப் புக்கதவுகளைத் திறந்து உள்ளே நுழைந்தார்கள். அந்த விடம் ஒரு பெரியகூடம். அதன் கோடியில் ஒரு மேடை மேல் இரண்டு வரிசைகளாகக் கவசங்கள் ஆள் நிற்பது போல் வைக்கப்பட்டிருந்தன. அவைசுளெல்லாம் முன் இருந்த அரசர்கள் பிரக்யாதி பெற்ற வீரர்கள் இவர்கள் அணிந்திருந்த கவசங்கள். அவற்றின் பின்பக்கம் அவர வர்கள் யுத்தங்களில் தங்கள் எதிரிகளிட மிருந்து கைப் பற்றிய கொடிகள் வைக்கப்பட் டிருந்தன. சில கவசங்க ளுக்குச் சிரக்கவசமில்லை. அப்படிப் பட்டவைகளுக்கு மெழுக்கால் செய்த சிரசுகள் வைக்கப்பட் டிருந்தன. அவை உயிருள்ள உருவங்கள்போலவே காணப்பட்டன. சுவர்களில் ஆயுதங்கள் தொங்கவிடப்பட் டிருந்தன. அக் கவசங்கள் ஆயுதங்கள் யாவும் பளபளவென்று ஜொலித் துக்கொண் டிருந்தன. அக்கூடத்தில் மேல் கூரையிலிரு ந்து தொங்க விடப்பட்ட தீபங்கள் எரிந்துகொண் டிருந்தன.

இருவரும் அக்கூடத்தின் ஒரு கோடியில் நின்று கொண்டு பிரமையோடு நோக்கிக் கொண்டே யிருந்தார் கள். அச்சமயம் கவசங்கள் நிற்கும் மேடையின் வலது பக்கம் திடீலென்று ஒருசோதிப் பிரகாசம் தோன்றியது. அது ஒரு அறைக்குள் இருக்கும் தீபத்திலிருந்துவருவது போல் தோன்றியது. ஆனால் அது அங்குள்ள தீபங்க ளைப்போன்ற சாதாரண தீபத்தின் ஒளியாய்ப் புலப் படவில்லை.

இராணியும் இராகவனும் மெதுவாய்ச் சென்று கொண்டிருந்தவர்கள் ஏககாலத்தில் தட்டென்று நின்று பிரமிப்படைந்து மிரளமிரள விழித்தார்கள். இராணி இதென்ன வெளிச்சம் என்று குளறிக்கொண்டே கேட்

டாள். இராகவன் "அந்தப்பக்கம் ஏதோ அறையின்கதவு திறக்கப்பட் டிருப்பதால் அதற்குள் ளிருக்கும் தீப வொளி இப்படி வெளியில் பிரகாசித்துக்கொண் டிருக்கி றது" என்றான்.

இராணி "அந்தப் பக்கம் ஒரு கதவுமில்லை" என்று மிக்கபயத்தோடு பார்த்தாள். இராகவன் இதறகெல்லாம் அஞ்சாதே என்பதற்குள் இராணி "ஆ அதோ என்பெரிய தந்தையின் கவசம்" என்றாள். இராகவன் "ஆம். அந் தப்பிரகாசம் அக்கவசத்தின்மேல் பூராய்ப் பிரகாசித்துக் கொண்டிருக்கிறது. நாம் குழந்தைகளைப்போல் பயப் படலாகாது. நான் கூறுவதைக்கேள். இப்பிரகாசம் ஏதோ ஒரு பொய்க்காட்சி யாகவே இருக்கவேண்டும், அருகிற் சென்றால் ஒன்றுமேபிரா து" என்றான்.

இராணி "ஆயினும் ஆவேசம்வந்தது என்னமோ உண்மையே. ஏனெனில் நமது அறையில் அந்த ஆவேசம் தோன்றியபின் இவ்வளவு காலத்திற்குள் ஒரு மனிதன் அணியவும் கழற்றவும் மிக்க கஷ்டமான அக்கவத்தைக் கழற்றி மறுபடி இப்படி மாட்டிவிடமுடியாது" என்றாள். இராகவன் தன்னாலானவரை யவளுக்குத் தைரியங் கூறிய பின்பு "சரி நான் சாந்தமாகவே யிருக்கிறேன். இந்தமர் மத்தை யறிந்தாலன்றி இதைவிட்டுப் போகேன். வர அந்த வெளிச்சத்தி னருகிற் சென்று பார்ப்போம்" என்று கூறி அவன் புயத்தை விட்டுவிட்டுத் தைரியத் தோடு நிமிர்ந்து நின்றாள். அதன் பிறகு இருவரும் மெது வாய் நடந்து சென்று அங்குதோன்றி யிருக்கும் வெளிச் சத்திலேயே நின்றார்கள். மறுநிமிடம் இருவரும் ஏககா லத்தில் அப்பிரகாசம் வரும் திக்கை நோக்கினார்கள். உடனே அவர்கள் எதிர் பார்த்தபடி பயங்கரமான விஷ

யம் அங்கொன்றுமில்லை. அதற்கு மாருக அங்கிருந்த காட்சிகளைக் கண்டதும் மிக்க ஆச்சரியமும் கொஞ்சம் சந்தோஷமும் அடைந்து, பிரமித்து வாய்பேச முடியாமல் கண்ணிமையாமல் பார்த்தபடி நின்ருர்கள்.

---

27 - வது அத்தியாயம்.

மிக்க ஆச்சரியமான நாடகமேடை—பயங்கரக்காட்சிகள்-சூது நடக்கை—இராகவனுடைய சிந்தனைகளும் தீர்மானமும்.

அந்த வெளிச்சம் அந்த விடத்தில் சுவருக்குள் தோன்றிய சிறு குகைபோன்ற ஒரு இடத்திலிருந்து வந்துகொண்டிருந்தது. அந்தவிடம் மேலே வில்போல் வளைவான கூரையை யுடையதாயிருந்தது. அக்கூரையிலிருந்து ஒருவிதத் தீபம் தொங்கிக்கொண்டிருந்தது. ஆச்சரியமான அத்தீபத்தின் பிரகாசமே அப்படி ஜொலித்துக்கொண்டிருந்தது. அக்குகையின் பக்கங்கள் மேல் கூரை யாவும் பளபள வென்று பிரகாசம் பொருந்திய வெண்ணிற முடையனவாக விருந்தன. இவர்களுக்குப் பிரமிப்படையும் வண்ணம் ஆச்சரியத்தை யுண்டாக்கியவை இவைமட்டுமே யல்ல.

அந்தக் குகைபோன்ற அறையின் மத்தியில் ஒரு மேடைமேல் ஐந்து உருவங்கள் நின்றுகொண்டிருந்தன. முதலில் அங்கிருப்பது உயிருள்ள மனிதர்களே யென்று இவர்கள் எண்ணிப் பிரமித்து விட்டார்கள். உற்றுப் பார்க்கப் பார்க்க அவை யசையாது நின்றபடியாற்ருன் பிரதிமைகள் என்று கருதவேண்டிய தாயிற்று. உருவத்

தில் யாவும் ஆள் உயரமே யிருந்தன. அவை மெழுகினுல் செய்யப்பட் டிருந்தன. ஆயினும் நிறம் சாயல் முதலிய எல்லாவற்றிலும் உயிருள்ள மனிதர்கள் போலவே யிருந் தன. அதோடு உடைகள் மனிதர் அணியும் சாதாரண உடைகளாகவே யிருந்தன.

இருவரும் உற்று நோக்கிக்கொண்டே யிருக்கையில் திடீலென்று ஏககாலத்தில் இருவர் மனதிற்கும் ஒரு உண்மை புலப்பட்டு ஒருவரை யொருவர் நோக்கினுர்கள். அதாவது அங்கிருக்கும் ஐந்து உருவங்களில் முதலில் நிற்பது பத்மநாயகியின் உருவம்போல் தோன்றியது. இதைக்கண்டதும் பின்னும் மிக்க வியப்படைந்து இருவரும் கண்களைத் துடைத்துக்கொண்டு உற்றுப் பார்த்தார்கள். ஆம் பத்மநாயகியே. அதேயுயரம் அதேபருமன். அதே யங்கப் பிரமாணங்கள். அதே முகவசீகரமும் சாயலும். இது மட்டுமல்ல; அமரநாதம் இராஜகுமாரன் கொலைசெய்யப்பட்ட அன்று அவள் எத்தகைய உடையெம்மாதிரி யணிந்துகொண் டிருந்தாளோ எல்லாம் அப்படி யப்படியே யிருந்தன.

இதற்குள் இன்னெரு ஆச்சரியக் காட்சி இவர்கள் பார்வையைக் கவர்ந்தது. அதாவது பத்மநாயகியின்பின் ஒரு பக்கத்தில் வாலிபர்களாகிய ஒரு மங்கையும் ஒரு வாலிப புருடனும் மிக்க அன்னியோன்னியமாய்ச்சம்பாஷித்துக்கொண் டிருக்கிருர்கள். அவற்றை நன்ருயுற்று நோக்கி அவ்வுருவங்கள் யாரென் றுணர்ந்ததே இவர்களுக்கிருந்த சந்தோஷமும் வியப்பும் சற்று குறைந்து மனதில் ஒருவிதப்பயம் உண்டாயிற்று. தூரத்திலிருந்து வரும் சிங்கத்தின் கர்ச்சனையைக் கேட்ட கரிகளைப்போல் உளம் நடுக்கங் கொண்டார்கள். ஏனெனில் அவ்வுருவங்கள் இவர்க ளிருவருமே. அதாவது இராணியும் இராகவ

னுமே. இவர்களுடைய உருவங்களும் சற்றும் குறைவின்றி இவர்களைப் போன்றே எல்லா அம்சங்களிலு மிருந்தன.

அங்கிருந்த நான்காவது உருவம் டாக்டர் தங்கவேலுப்பிள்ளையின் உருவம். வயது, முகத்திலுள்ள வெறுப்பும் கடுகடுப்புமான குறிகள், அங்கங்கள், நரைத்த மீசை தாடி, உடைகள்முதலிய வெல்லாம் எள்ளளவு குறைகூடவின்றிச் சரியாய் அப்படியே யிருந்தன.

இப்போது மீதியிருக்கும் ஐந்தாவது உருவத்தின் மேல் இவர்கள் நாட்டம் வீழ்ந்தது. அதுயாரென் றுணர்ந்ததே இராணியின் முகம் சவம்போல் வெளுத்து விட்டது. அவ்வுருவம் விஷத்தால் கொல்லப்பட்ட அரசனுகிய இராணியின் பெரியதந்தை யுருவமே. அது கிரீடம் முதலியயாவும் அணிந்து அந்த அரசன் உயிரோடிருப்பது போலவே இருக்கிறது.

இராணி அதை யுற்று நோக்கியதும் கோவென் றலறிக் கீழே விழப்போகும் சமயம் இராகவன் அவளைப்பிடித்துக்கொண்டு "பயப்படாதே இதென்ன முட்டாள் தனம், இவையாவும் மிக்க சாமார்த்தியமாய்ச் செய்யப்பட்ட மெழுக்கு உருவங்களே யென்று உனக்கு விளங்கவில்லையா!" என்று தேறுதல் கூறினன்.

ஆயினும் இராணியின் மனதில் திகில் ஒழியவில்லை. அவள் தன் அறையில் இராஜன் ஆவேசம்போன்ற கவசமணிந்த உருவத்தைக்கண்டு இன்னும் சரியாய் அரைமணி நேரமாகவில்லை. அதைக்கண்டது முதல் அவள் மனதில் பெரும்பீதி யுண்டாயிற்று. ஏனெனில் குற்றமுள்ளவளாகையால் தன் பெரிய தந்தைதான் அயோக்கியமும் அக்கிரமுமாகிய நடக்கைக்குக் கோபமடைந்து ஆவேசமாக வந்து தனக்கு எச்சரிக்கை செய்கிறார் என்று அவள் மன

திற்பட்டது. ஆகையால் இப்போது மறுபடி யதே வுருவத்தை யிங்கும்காணவே அவள்மனதில் சொல்லொணுத பெருங்கலக்கமும் திகிலும் உண்டாய் விட்டன. ஆயினும் தன் காதலன் அது மெழுக்கால் செய்யப்பட்ட உருவமேயென்று கூறியதை நினைத்துக்கொண்டு சற்று தைரியமடைந்து நிமிர்ந்து நோக்கினுள். இப்போது காணும் காட்சி பின்னும் பெரிய வியப்பையும் வேதனையையும் உண்டாக்கி விட்டது " அய்யோ கடவுளே! இதென்ன. நிச்சயமாகவே இப்படித் தோன்றுகிறதா ?" என்று அலறினுள். இராகவனும் பிரமிப்பும் ஒருவிதப் பீதியுமடைந்து மரம்போல் அசைவற்று நின்று நடக்கிற காட்சியை நோக்கிக்கொண்டே யிருந்தான். அங்கு நடக்கும் ஆச்சரியத்தால் இவர்கள் அதைப்பார்க்காம லிருக்கவும் கூடவில்லை.

அரசனுடைய உருவத்தில் ஒருவித மாறுதலுண்டாகத்தொடங்கியதே யிவர்களுக் குண்டான மனக்குழப்பத்திற்குக் காரணம். அரசன் உருவத்தி லிருந்த பிரகாசம் மங்கத்தொடங்கியது. சற்று நேரத்திற்குள் முகம் விஷம் ஏறியதுபோல் நீலநிறமடைந்து, கண்கள் கண்ணுடிக்கண்கள்போலாகிவிட்டன. பிறகு சவத்தின் முகம்போலவே வெளுத்து விட்டது.

இருவரும் பேசவாவது அசையவாவது முடியாமல் மந்திரத்தால் கட்டப்பட்டவர்கள்போல் நின்று பார்த்துக்கொண் டிருக்கையிலேயே மாறுதல்மேல் மாறுதலாய்ப் பலமாறுதல்கள் உண்டாயின. அரசன் உருவம் சவம் அடையும் மாறுதல்போன்ற மாறுதலை யடையத் தொடங்கி வீங்கியது. உடைகளும் மங்கியழிபவைபோல் கந்தல்கந்தலாய் நைந்து சிலந்திக் கூண்டுகள்போல் விழத் தொடங்கின. அதன் பிறகு அத்தேகம் முழுதும் தோன்

றிப்பயங்கரக் காட்சியாயிருந்தது. அத்தேகம் வீங்கிவெடித்துப் புழுத்து கடைசியில் பொத்தென்று கீழேவிழுந்தது. அதன் கண்களிலும் நாசித் துவாரங்களிலு மிருந்து பெரிய புழுக்கள்நெளிந்து வெளிவந்தன. அச்சமயம் எங்கிருந்தோ எலிகள் ஓடிவந்து அச்சவத்தைப் பிய்த்துத் தின்னத்தொடங்கின.

இக்காட்சி சுமார் ஐந்துநிமிடம் நடந்தது. அதைக் கண்ட இருவருடைய மனதிலும் உண்டான பயங்கர உணர்ச்சிகளையும் வியப்பையும் இத்தன்மைய வெனக் கூற முடியாது. அவர்கள் இந்தப்பிரமிப்பில் இருக்கையில் இன்னொரு சம்பவம் நேர்ந்தது. அதாவது அம்மேடையின் மத்தியிலிருந்து ஒரு உருவம் மேலே கிளம்பியது. அது வெள்ளைச் சீலை போர்க்கப்பட்ட ஒரு சவம். அதன் முழுப்பாகமும் மேடைமேல் நின்றபோது அதன் முகம் நன்ருய்த் தெரிந்தது. அம்முகம் கொலை செய்யப்பட்ட அமரநாத இராஜகுமாரன்முகமே. அம்முகமே இராணிக்குச் சொல்லொணுத் திகிலையும் மனோவேதனையையும் உண்டாக்கிய தெனின், தான் திரித்த பட்டுக் கயிறே அச் சவத்தின் கழுத்தில் சுருக்குபோல் மாட்டப்பட்டுத் தொங்கிக்கொண் டிருந்ததென்றுல், அவள் மனோவேதனை யெவ்வா றிருந்திருக்கும் என்பதை யிதை வாசிப்போரே யூகித்துக் கொள்ளலாகும். இராகவன் மனம்மட்டும் நிம்மதியா யிருந்ததென்று கருத வேண்டாம். அவனும் சொல்லொணு வியப்பும் பிரமையும் கலவரமு மடைந்து மரம்போல் நின்றுன். அவர் பேய்களால் கெட்டியாய்ப் பிடிக்கப்பட்டவர்கள்போல், கண்களால் நடக்கும் காட்சிகளைப்பார்ப்பது தவிர பேசவாவது கைகால்களை யசைக்கவாவது சக்தியற்றவர்களாகி நின்றவிடத்திலேயே நின்றுர்கள்.

அமரநாதன் கழுத்தில் சுருக்கு மாட்டப்பட்டதும் தன் கரங்களால் பின்னப்பட்டது மாகிய அதேகயிறு அந்த உருவத்தின் கழுத்தில் மாட்டப்பட் டிருப்பதைக் கண்டதே இராணியின் ஆவி சோர்ந்து விட்டது. ஏனெனில் இப்போது தன் கண்முன் காணப்படுவன வனைத்தும் பொய்த் தோற்றமாக வின்றி உண்மைப் பொருள்களாகவே இருக்கும் பட்சத்தில், அன்று நடந்த கொலைச் சம்பவத்தை வேறுயாரோ பார்த்திருக்க வேண்டும் என்று அவள் மனதிற்குப் புலப்பட்டது. இச்சந்தேகமே பெருந்திகிலை யுண்டாக்கப் போதுமானது. இக்காட்சி அங்கு நடக்கும்போது அமரநாதன் சவம் அலங்காரம் செய்யப்பட்டு அரண்மனையில் அவன் அறையில் அவர்கள் வழக்கப்படி வைக்கப்பட் டிருக்கிறது. அவன் மடிந்து மூன்று நாட்களே யானபடியால் அடுத்த நாள்தான் அதை யடக்கம்செய்ய ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

இக்காட்சி சுமார் ஏழு நிமிடங்கள் நிகழ்ந்தது. மறு நிமிடம் அங்குள்ள இராணியாகிய இவள் உருவத்திலேயே மாறுதலுண்டாகத் தொடங்கியது. அம்மாறுதல் அரசன் உருவத்தில் உண்டான மாறுதலைப் போன்றதே. ஆம் முன்னே முகத்தின் பிரகாசம் நீங்கி முகம் சவத்தின் முகமாக மாறுதல், பிறகு வீங்கிவெடித்து அழுகிப் புழு புழுத்து அழிதல் முதலிய எல்லா விஷயங்களிலும் அதே விதமான மாறுதல் நேர்ந்தது.

அத்தகைய அழியும் காட்சியைக் கண்டதே இராகவனுக்கு மனதில் ஒருவித வெறுப் புண்டாகித் தன்னருகிலிருந்த இராணியை வெறுப்போடு எட்டத் தள்ளிவிட்டான். இராணி அவன் செய்ததன் காரணத்தை யுணர்ந்தாளெனினும், அவள் வாய் திறப்பதற்குள் இன்னொரு

புதுக்காட்சி அங்கு தோன்றியது. இருவரும் மறுபடி இமைகொட்டாமல் பார்த்துக் கொண்டேயிருந்தார்கள்.

ஏனெனில் அந்த மேடையின் பின்னுலிருந்து ஒரு ஆள் மெதுவாய் மேலெழும்பினுன். அவன் அருவருக்கத்தக்க பார்வை யுடையவன். அவனைக் கண்டதே இவர்களிருவருக்கும் வெறுப்பும் பீதியும் உண்டாயின. ஏனெனில், அவன் அந்த நகரத்துத் துரைத்தனக் கொலையாளி. அவன் மேடைமே லேறியதும் அமரநாதன் சவவுருவம் கீழிறங்கத் தொடங்கியது. அதன் சிரசு மறைந்துபோகும் சமயம் கொலையாளி சட்டென்று குனிந்து அவன் கழுத்திலிருந்த கயிற்றைக் கழற்றிக்கொண்டு, உடனே அதை அங்குநின்றிருந்த டாக்டர் தங்கவேலுப்பிள்ளையின் கழுத்தில் மாட்டினுன். இக்காட்சியால் இவர்கள் இருவரும் சொல்லொணு மனக்கலக்க மடைந்தார்கள்.

அதற்குள், டாக்டர் கழுத்தில் அக்கயிறு மாட்டப்பட்டதே அங்கிருந்த பத்மநாயகியின் உருவம் தடாலென்று இராகவனுகிய தன்புத்திரன் பாதங்களில் விழுந்தது. அக்காட்சி "நீ டாக்டரை மன்னித்து என்னைக் காப்பாற்று" என்று வேண்டிக்கொள்வதுபோலிருந்தது.

அச்சமயம் இன்னெரு சம்பவம் நேர்ந்தது. அதாவது அங்கிருந்த சுவரில் இருந்து புறப்பட்டது போலவே, ஒரு உயரமும், கம்பீரத் தோற்றமு முடைய ஆள் வந்ததும் மேடைமேலேறினுன். அவன் கள்ளத்தலைவனுகிய மாயசிங்கனே யென்று இராகவன் அறிந்துகொண்டான். அந்த உருவம் துரிதமாய் மேடைமே லேறியதும் இராகவன் உருவத்தின் கரத்தைப் பற்றிக்கொண்டது. அதே நிமிடம் அக்குகைபோன்ற விடத்தின் உட்பக்கத்திலிருந்து "இராகவா! நீ காப்பாற்றப்பட்டாய்" என்ற ஒரு சத்தம் கிளம்பியது.

உடனே இராணி தன்மனதிலிருந்த திகிலையும் குழப்பத்தையும் சற்றேனும் அடக்க முடியாமல் கீழே முழங்காற்படியிட்டு "அய்யோ கடவுளே! என்னைக் காப்பாற்றும். நான் என்ன சண்டாளியாய் விட்டேன். அய்யோ நான் என்நெறிதவறி நடந்தேன். அய்யோ என்னை மன்னியும். மன்னியும்." என்று அலறினாள். இராகவன் அச்சத்தத்தைக் கேட்டதும் திரும்பிப்பார்த்தான். ஆனால் அவளை எழுந்திருக்கச் செய்து அவளுக்குத் தேறுதல்கூற முயலவில்லை. அதற்கிடையில் மாயசிங்கன் வந்தபின் "இராகவா! நீ காப்பாற்றப் பட்டாய்" என்ற சத்தம் உண்டானதே பத்மநாயகியின் உருவம் மூர்ச்சித்தது போல் வீழ்ந்து விட்டது. மறுநிமிடம் இராகவன் திரும்பிப் பார்க்கும்போது அங்கிருந்த தீபப்பிரகாச மாவது குகையாவது ஒன்றுமேயில்லை. எல்லாம் மாயமாய் மறைந்து விட்டன.

இராகவன் ஆத்திரத்தோடு போய் அந்த விடத்தில் தடவித்தடவிப் பார்த்தும் ஒன்றுமே புலப்படவில்லை. கதவாவது வாயிற்படியாவது வெளிச்சமேனும் காற்றேனும் வரக்கூடிய மயிரிழையளவு துவாரமாவது புலப்படவில்லை. இதென்னமோ சூது நடந்திருக்கிற தென்பதே அவன் தீர்மானம். அவன் அங்கிருந்து திரும்பி மறுபடி இராணி யிருக்குமிடத்திற்கு வந்து அவளுக்குத்தேறுதல் கூறினான். அது என்னமோ ஒருவிதப் பொய்க்காட்சியே என்று அவள் நம்பும்படி கூறிக்கொண்டே அவளை யழைத்துக்கொண்டு அங்கிருந்து புறப்பட்டான். இருவரும் வாயிற்படியை நோக்கிச் சில அடிகள் சென்றபோது பின்னால் ஒருவித சத்தங்கேட்கவும் திரும்பிப் பார்த்தார்கள். அப்போது மேடைமேலிருந்து அரசருடைய கவசம் கீழிறங்கி அதட்டுவதுபோல் வலது கரத்தை உயரத்

தூக்கிக்கொண்டு இவர்களை நோக்கி வருவதைக் கண்டார்கள். இராகவன் "அட இதென்ன பெரிய அதிசயமாயிருக்கிறது" என்று கூறியதும் கோபத்தோடு தன் வாளை யுருவிக்கொண்டு வரும் உருவத்தை யெதிரிட்டுச் செல்ல அடியெடுத்து வைத்தான்.

அச்சமயம் இராணி "அய்யோ" என்றலறிக்கொண்டே அவனைக் கெட்டியாய்ப் பற்றிக்கொண்டாள். மறு விநாடி அங்கிருந்த கவசங்களி லிருந்து வெளிவந்தது போலப் பல ஆட்கள் பாய்ந்து வந்ததும் இராணியையும் இராகவனையும் பிடித்து இருவரையும் மல்லாக்கத்தள்ளி, அவர்கள் அப்பிரமிப்பி லிருக்கும் போதே வாயில் ஏதோ திரவப் பதார்த்தத்தை யூற்றிவிட்டார்கள். அடுத்த விநாடியே இருவரும் ஸ்மரணை யிழந்து விட்டார்கள்.

மறுநாள் பொழுது விடிந்து இராணிக்கு ஸ்மரணை வந்தபோது தன் சயன அறையில் ஒரு சோபாவின்மே லிருக்கிறாள். முதலில் இரவு தான் தன் உட்காரும் அறையில் இராகவனோடு பேசிக்கொண் டிருந்தபோது கவச மணிந்த உருவம் வந்து நின்றது மட்டும் நினைவிலிருக்கிறதேயன்றி வேறொன்றும் நினைவில் இல்லை. பிறகுகொஞ் சங் கொஞ்சமாக நடந்த சங்கதிகளனைத்தும் நினைவிற்கு வந்தன. இது ஒரு பயங்கரமான கனவுதானோ வென்று சிந்தித்தாள். "அப்படியானால் நாம் அந்த அறையிலிருந்து இங்கு எப்படிவந்தோம். ஏன் முழு உடையோடு நித்திரைசெய்தோம்." என்று சிந்தித்துச் சிந்தித்துக் கடைசியில் எப்படியாயினும் இது கனவாகவே தான் இருக்க வேண்டுமென்று தீர்மானித்துக் கொண்டாள். என்ன தான் தீர்மானித்துக் கொண்டாலும் அவள் உள்ளத்தில் நிம்மதியின்றி ஒருபக்கம் திகிலே இருந்துகொண் டிருந்தது.

இராகவன் நித்திரையி னின்றும் விழித்தபோது தான் தன் படுக்கையறையில் ஒரு சோபாவின்மேல் படுத்திருக்கக் கண்டான். இரவு நடந்த விஷயங்களனைத் தும் நினைவிற்கு வந்தபோது அவை கனவென்று அவன் சற்றும் கருதவில்லை. இது நம்மை யேமாற்றிப் பயமு றுத்த வேண்டுமென்று மிகச்சாமார்த்தியமாய்ச் செய்யப் பட்ட தந்திரமே யென்று நிச்சயித்துக் கொண்டான். தான் அக்குகையில் கண்டவற்றில் மற்றவைக ளெல்லாம் மெழுக்கால் செய்யப்பட்ட உருவங்களேயாயினும் அங்கு தோன்றிய மாயசிங்கனும் கொலையாளியு மட்டும் பதுமை களல்லவென்றும் உயிருள்ள மனிதர்களே யென்றும் அவ னுக்கு ஐயமறப்புலப்பட்டுவிட்டது. அதோடு அங்கு அந்த இரண்டு உருவங்கள் அழிந்த காட்சியும், டாக்டர் தங்க வேலுப்பிள்ளையின் கழுத்தில் கயிறு மாட்டப்பட்டுக் கொலையாளி அவனைத்தூக்கிற்போட ஆயத்தமா யிருந் ததும், அச்சமயம் தன்தாய் தன் காலில் விழுவதுபோல் காட்டப்பட்டதுமாகிய எல்லாக் காட்சிகளும் மாயசிங்கன் தன்னிடம் கூறிய எச்சரிக்கைகளைப் பொருந்தியதாகவே யிருந்தன. ஆகையால் இவையாவும் அவனால் செய்யப் பட்ட மிக்க சாமார்த்தியமான வேலைகளே என்று கருதி அடியிற் கண்டபடி தீர்மானித்துக் கொண்டான்.

"நாம் கண்டயாவும் அக்கள்ளத் தலைவனாகிய மாய சிங்கன் செய்த ஜாலங்களே. அவன் இருவகை நோக்கங் களைக்கொண்டு இதைச் செய்திருக்கிறான். அவன் துஷ்ட கேது நகரக்குரு இவர்கள் பட்சத்திற் சேர்ந்தவன். இப் போது அமரநாதன் மடிந்து விட்டதால் அவர்கள் கல கத்தை யுண்டாக்க வேறு வழியில்லை. ஆகையால், இரா ணிக்குத்தான்செய்த குற்றத்தால் கடவுளுக்கே தன்மேல் கோபமுண்டாயிற் றென்றும், தனக்குப் பட்டத்தை

யளித்த தன் பெரியதந்தைக்கே தன்மேல் கோபமுண்டாகி ஆவேசமாய் வந்து தனக்கு எச்சரிக்கை செய்தாரென்றும் பூரணமானபயம் உண்டாகிவிட்டால் அவள் பேசாமல் பட்டத்தைத் துஷ்டகேதுவுக்கே கொடுத்துவிட்டுத் தான் எதாவதொரு கன்னியா மாடத்திற்போய்ச் சேர்ந்துவிடலா மென்று தீர்மானித்து விடுவாள் என்பது ஒரு யோசனை. அப்படிக் கின்றேல், இராணியின்மேல் நமக்கு வெறுப்புண்டாகச் செய்துவிட்டால் அதன்பிறகு நாம் அங்கு காட்டப்பட்ட குறிகளால் டாக்டரையும் நமது தாயாரையும் நம்பி யவர்கள் பட்சத்தில் இருந்தால் நாமும் அவர்களோடு அழிந்து விடுவோம், மாயசிங்கன் துஷ்டகேது இவர்கள் பக்கத்தில் சேர்ந்து கொண்டால் தான் கெடுதியின்றி க்ஷேமப்படுவோம் என்று தீர்மானித்து அப்படியே நடந்துகொள்வோ மென்றும் யோசித்தே இத்தந்திரத்தைச் செய்திருக்கிறன். என்னைக் கோழைப்பய லென்றும், இத்தகைய தந்திரஜாலங்களாலெல்லாம் நம்மை மயங்கி யேமாற்றி விடலாமென்றும் எண்ணிக்கொண்டான். சுத்த மூடப்பயல். துஷ்டப்பயல் இதற்கும் இத்தகைய வித்தைகளுக்கும் நாமா அஞ்சுகிறது. மாயசிங்கன் என்னமோ பெருந்தன்மை யுடைய உதாரி, நல்லவன் என்று எண்ணிவிட்டேன். சயநலத்திற்கே எதையும் செய்யும் துஷ்டப்பயல் என்று இப்போது அறிந்து கொண்டேன். இவன் வார்த்தைகளை மதித்து அவற்றைப்பற்றிச் சிந்திக்கத் தொடங்கியதே மூடத்தனம். இருக்கட்டும் சண்டாளன் இன்று முதல் அவன் நமது ஜன்மவிரோதியே. இப்போது நாம் அரசனைக் கூடியசமயம் வாய்ந்திருக்கிறது. இத்துஷ்டப்பயல் இருக்கிறவரையில் நமதுகாரியம் சித்தியாவது அசாத்தியமாகவே முடியும். ஆகையால் இவனை யெவ்விதத்திலே

னும் அழித்துவிட வேண்டியதே. நமது கரத்தால் இவனைக்கொன்று ஜெயமடைந்தால் ஜனங்களெல்லாம் நம்மைச் சந்தோஷத்தோடு அரசனுக ஏற்றுக் கொள்வார்களென்பதில் சற்றும் ஐயமில்லை'' என்று தீர்மானித்துக் கொண்டான்.

இரவு நடந்த விஷயங்களில், அமரநாதன் சவமும் அவன் கழுத்தில் மாட்டப்பட்ட கயிறும் அங்குகாட்டப்பட்ட குறிப்பினின்று அமரநாதன் கொலைசெய்யப்பட்ட சங்கதி எதிரிகளுக்கு எப்படியோ தெரிந்திருக்கிறதென்று விளங்கிவிட்டது. ஆயினும் அவர்கள் நடக்கையால் அவர்கள் அதை யிரகசியத்தில் வைத்துக் கொண்டே வேலைசெய்யக்கருதி யிருக்கிறுர்களென்றும் பகிரங்கப்படுத்த மாட்டார்களென்றும் விளங்கியது. ஆகையால் இராகவன் அதற்கஞ்சவில்லை.

மேற்கண்டவாறு மனதில் தீர்மானித்துக் கொண்டு, எழுந்து முகத்தைச் சுத்திசெய்துகொண்டு வேறுடையணிந்து துரிதமாய் இராணியிடம் சென்றுன். இராணி மிக்க முகவாட்டமடைந்து திகில் பிடித்தவள் போல் தோன்றினுள். அவள் முகக்குறியால் இரவு நடந்தவிஷயங்களைப் பெரும்பாலும் ஒரு பயங்கரமான கனவென்றே அவள் எண்ணியிருக்கிறுளென்பதை இராகவன் அறிந்துகொண்டு தந்திரமாய் அவள் அவ்வாறே நம்பும்படிச் செய்துவிட வேண்டுமென்று தனக்குள் தீர்மானித்துக் கொண்டான். ஏனெனில் அப்படிக்கின்றி யாவும் உண்மையே யென்று அவள் மனதிற் பட்டால் அவளுடைய பீதியதிகமாகிப் பிறகு தன்னை மணம்புரியத் துணியமாட்டாள். ஆகையால் தான் ஒன்றும் அறியாதவன் போலும், அப்போது தான் முதல் முதல் அவள் கூறும் அச்சங்கதிகளைக் கேட்பவன் போலவும் அபிநயம் செய்து

யாவற்றையும் விபரமாய்க் கூறும்படிச்செய்து கடைசியில் " சே! இதற்கா இப்படிப் பிரமாதமாய்ப் பயந்து கிடக்கிருய். நாம் பேசிக்கொண்டிருந்த அறையி லிருந்து நீயுன் படுக்கையறைக்கு வந்தது உனக்கு நினைப்பில்லாத தினாலேயே நீ இப்படிக் கலவரப்பட்டுக் கொண்டாய். அச்சங்கதி யுனக்குத் தெரியாதுதான். ஏனெனில் நாம் பேசிக்கொண் டிருக்கையிலேயே நீ நித்திரை போய்விட்டாய், நீ விழித்துக் கொள்வா யென்று நான் சற்றுநேரம் பார்த்தும் நீ விழிப்பதாய்த் தோன்றவில்லை. ஆகையால் உன்னை எழுப்பலாகா தென்று மெதுவாய் எடுத்துக் கொண்டுபோய் உன் படுக்கை யறையில் படுக்கவைத்து விட்டேன் " என்றான். இம்மொழிகளையும் இவன் கூறிய மற்ற தேறுதலான வார்த்தைகளையும் கேட்ட இராணி தான் கண்டது கனவென்றே நம்பிக்கொண்டாள்.

இச்சம்பவம் டாக்டருக்கும் தன் தாய்க்கும் தெரியலாகாதென்பது அவன் கருத்து. ஆகையால் அவன் இராணியை நோக்கி, இச்சங்கதியில் என் தாயாருக்கும் டாக்டருக்கும் மனவருத்தத்தை யுண்டாக்கத்தக்க விஷயங்களிருப்பதால் இதைப்பற்றி அவர்களுக்குக் கூருமலிருப்பதே நலமென்று கூறி, அவள் அவ்வாறே சம்மதிக்கும்படிச் செய்து விட்டான். தன் தாய்க்குக் கூறினல் அவள் தான் அறிந்தவற்றை யெல்லாம் கட்டாயம் டாக்டரிடம் கூரும லிருக்கமாட்டாள் என்று அவன் அறிவான். ஆகையால் " நாம் முன்பு மாயசிங்கன் நமக்கு ஏதோ விஷயங்களைக் கூறியதாக நாம் நமது தாயினிடம் கூறிய யாவும் டாக்டருக்குத் தெரிந்தேயிருக்கும். ஆகையால் இப்போதிதையு மறிந்தால் மாயசிங்கன் கூறிய சங்கதிகள் நமது மனதில் ஆழப்பதிந்து விட்டதாகவும் ஆகையால் நாம் மன உறுதியிழந்து கோழைத்தன மடைந்து விட்ட

தாகவும் டாக்டர் கருதிக்கொள்வான்'' என்று சிந்தித்தே அவர்களிருவருக்கும் இச்சங்கதி கூறலாகாதென்று தீர் மானித்தான்.

இன்னொரு விஷயம் உண்டு. அதாவது, புண்ணிய கோடிப் பிரபுவின்மேல் இராகவனுக்கு ஒருவிதப் பொறு மை யுண்டாகி யிருக்கிறது. எப்படியெனில் அமரநாதன் கொலையில் அவன் டாக்டருக்கு உதவியாயிருந்து மிக்க துணிகரமாய் வேலைசெய் திருப்பதால் டாக்டருடைய அன்பைப் பெற்றிருப்பதோடு இராணி டாக்டர் இவர்க ளுக்கு மனமொத்த நண்பன் போலாய்விட்டி ருக்கிறான். ஏற்கனவே அவன் உயர்குலத்தான். மற்ற செல்வம், அந் தஸ்து, கல்வி யறிவு இவையாவற்றிலும் தனக்கு மிக்க மேம்பட்டவன். வீரதீரங்களில் தனக்கு எள்ளளவும் பிற் பட்டவனல்ல. அதோடு இரண்டொரு சமயங்களில் இராணி அவனை அன்போடு நோக்கியதை இராகவன் பார்த்திருக்கிறான். அவன் அழகிலும் சிறந்தவனே. டாக் டரும் இவன் தாயாரும் தாங்கள் சுயநலத்தைக் கருதி நடக்கிறவர்களானதால் தங்கள் நோக்கத்திற்கு இடையூ றுண்டாவதாயின் தன்னைப்பற்றிக் கவனிக்க மாட்டார்க ளென்று இராகவன் நன்கறிவான். ஆகையால் தான் மிக்க ஜாக்கிரதையா யில்லாமல், இராணிக்கும் தனக்கும் எள் ளளவு ஒற்றுமைக் குறைவு நேரிடும்படி இடந்தந்து விட் டால், தான் அரசனாவது அடியோடு கெட்டுப்போகும் என்று அவன் அறிவான். ஏனெனில் டாக்டர், இராணி புண்ணியகோடிப் பிரபுவை மணம் புரியும்படித் தந்திர மாய் ஏற்பாடு செய்து விடுவான். அச்சமயம் பத்மநாயகி தன் புத்திரனுக்காகப் பாடுபட்டாலும் டாக்டர் எண் ணத்திற்கு மாறாக அவளால் ஒன்றும் செய்ய முடியாது. புண்ணியகோடிப் பிரபு எல்லாவிஷயத்திலும் தனக்கு

மேலானவனானதால் இராணியும் அவனை மணம்புரியச்சம் மதிப்பாள் என்பதே இராகவன் எண்ணம். உண்மையில் இராணி யவன்மேல் வைத்திருக்கும் காதல் பூரணமானது. அவள் ஆரம்பமுதலே தன் கணவனை வெறுத்திருந்தாள். அவனை மணம்புரியச் சம்மதித்ததே பலவந்தத்தின்மேல்.

நேயர்களே ! அவ்வாறிருந்தாலும், ஒரு ஸ்திரீ தன் கணவனுக்குத் துரோகம் செய்தவரையில் புத்தியுள்ள எந்த ஆடவனும், அவள் கள்ளக் காதலனாயினும் அவள் சத்தியமான நெறியில் நடப்பாள் என்று ஒருபோதும் நம்பமாட்டான்.

இக்காரணங்களால் தான் இனி மிக்க ஜாக்கிரதையாய் இவ்விஷயத்தில் நடந்துகொள்ள வேணடு மென்று இராகவன் தனக்குள் தீர்மானித்துக் கொண்டான். இதுகாறும் அவன் எல்லா விஷயங்களிலும் டாக்டர் தன் தாயார் இவர்கள் புத்திமதிப்படியேதான் நடந்துவந்தவன். அவன் தான் காரியசித்திபெற ஒருவர் யோசனைக்கு எதிர்பாராமல் தன் யோசனைப்படி முயல வேண்டும் என்று கருதியது இதுவே முதல் முறையாகும்.

அவனுடைய முதல் நோக்கம் மாயசிங்கனை யொழிக்க வேண்டு மென்பதே. ஆனால் மாயசிங்கன் விஷயத்தில் அவனுக்குப்பயம் உண்டென்பது உண்மையே. அவன் இருந்தால் தான் இராஜனாகும் எண்ணம் சித்திபெறாது. ஆகையால் துணிகரமாய்க் காரியத்தைச் செய்ய அஞ்சிவிட்டால் அத்தகைய உயர்பதவிகிடைக்காது. மாயசிங்கனை யெப்படி யொழிக்கலா மென்று சிந்தித்தான். அவன் தன்னால் கூடியவழிக ளெல்லாம் சிந்தித்துப்பார்த்தும் எப்பக்கம் திரும்பினும் பீதியும் ஆபத்துமே அவன் எதிர் நிற்கின்றன. மாயசிங்கனைக் கொல்வதென்றால் சல

பத்தில் முடிகிற காரியமல்ல வென்றே அவன் மனதிற் பட்டுவிட்டது. அப்படி யிருந்தும் அவன் பின்னிடைந்து அதைரிய மடையவில்லை. அவனைத் தந்திரத்தால் தான் கொல்லவேண்டும் என்று அவன் மனதிற்பட்டது. அச்சமயம் அதற்கொரு ஆலோசனையும் புலப்பட்டது. ஆனால் அந்த ஆலோசனைப்படி தான் கோரியசந்தர்ப்பம் வாய்ப்பதற்காகக் கொஞ்ச நாட்கள் பொறுக்கவேண்டும். அது அவசரப் படுவதால் ஆகிற காரியமல்ல. அச்சந்தர்ப்பம் வாய்த்தால் அப்போது மாயசிங்கனைப் பகிரங்கமாகவே தனக்கு விரோதியாக்கிக் கொள்ளலாகும். ஆகையால் பொறுத்திருப்பதே நலமென்று தனக்குள் தீர்மானித்துக் கொண்டான்.

இதற்கிடையில் இராணிக்குத் தன்மே லிருக்கும் காதலுக்கு எள்ளளவு குறைவும் நேராவண்ணம் எந்நேரமும் அவள் அருகிலேயே யிருக்கவேண்டு மென்று தீர்மானித்துக் கொண்டான்.

28-வது அத்தியாயம்.

அமரநாதம் இராஜகுமாரன் மரணத்தைப்பற்றி நகரில் குழப்பம்—அரண்மனையில் இராணி முதலியவர்கள் இரகசிய சபைகூடி ஆலோசனை செய்தல்—ஜனக்கலகம் இராகவன் பொறுமையும் தந்திரமும்—இராகவனும் ஜனங்களும்—கலகம்—விஸ்வநாதனும் பூபாலனும்—இராகவன் ஆபத்து.

மறு நாள் அமரநாதனுடைய சவம் அடக்கம் செய்யப்பட்டது. அதற்குள் பயங்கரமான கொள்ளை நோயும் நகரைவிட் டொழிந்தது. ஆகவே ஜனங்கள் மறு

படி அமரநாதன் கொலையைப்பற்றியே ஆங்காங்குபேசத் தொடங்கினார்கள். முதலில் சிறு சிறு கூட்டங்களாகவே ஆங்காங்கு மறைவிடங்களில் இரகசியமாகவே பேசிக் கொண்டிருந்தார்கள். ஆனால் வரவர அதைப்பற்றிப் பேசுவோர் அதிகமாகிக் கொண்டே யிருந்ததோடு பகிரங்கமாகவே பேச ஆரம்பித்து விட்டார்கள்.

அதோடு துஷ்டகேதுவும் அவன் கட்சியைச்சேர்ந்தவர்களும் தங்கள் ஆட்களை யனுப்பி அமரநாதன் கொலை செய்யப்பட்டான் என்று எங்கும் பிரஸ்தாபம் செய்துவிடச் செய்தார்கள். அதனால் இராணியும் அவள் நண்பர்களுமே அமரநாதனைக் கொலைசெய்து விட்டார்கள் என்று எங்கும் பிரஸ்தாப முண்டாய் விட்டது. ஜனங்கள் ஆங்காங்கு பெருங்கூட்டங்களாய்ச் சேர்ந்து கோபத்தோடு அதைப்பற்றிப் பேசத்தொடங்கினார்கள்.

அமரநாதன் மடிந்து இரண்டு மூன்று வாரங்கள் கழிந்தன. அதற்குள் நகர ஓரத்திலுள்ள கிராமவாசிகளெல்லாம்கூட்டங் கூட்டமாய் நகரத்திற்கு வந்துசேரத்தொடங்கினார்கள். கடைசியில் ஜனக்கொதிப்பு மிக்க அதிகமாய் விட்டது. எதையும் பொருட் படுத்தாமல் தைரியத்தோடிருந்த டாக்டர் தங்கவேலுப்பிள்ளை கூட மனக்கலக்கமடைந்து அரண்மனையில் இரகசியமாய்ச் சபைகூட்டிப் பேசத் தீர்மானித்தான். ஆகையால் ஒருநாள் பத்மநாயகியின் அறையில் இராணி, டாக்டர், இராஜசபைக் காரியதரிசியாகிய விக்ரமநாதர், இராகவன், பத்மநாயகி, சித்ராங்கி, புண்ணியகோடிப் பிரபு ஆகிய இவர்கள் சபை கூடினார்கள்.

அச்சமயம் மணி பகல் பனிரெண்டாயிற்று. அன்று காலை ஆறுமணி முதல் நாட்டிலிருந்து ஜனங்கள் மற்ற காலங்களி லிருந்ததைவிட மிக்க பெரியகூட்டங்களாக

வந்து நகரத்தில் சேர்ந்துகொண்டே யிருக்கிறார்கள். சீக்கிரத்தில் கலகம் பகிரங்கமாய் உண்டாய் விடுமென்று எங்கும் பிரஸ்தாபமா யிருந்தபடியால், அச்சமயத்தில் நல்ல கொள்ளை யகப்படு மென்பதற்கு அச்சனங்கள் வந்து கும்புகூடினார்கள். டாக்டர் தங்கவேலுப்பிள்ளை பல ஆட்களை வேவுபார்த்திருந்து அப்போதைக் கப்போது நடக்கும் சங்கதிகளை யறிந்து வந்து கூறும்படி அமர்த்தியிருந்தார். அவர்கள் பத்து நிமிடங்களுக் கொருமுறை வந்து இருக்கும் நிலைமையைக் கூறிக்கொண் டிருந்தார்கள். சங்கதிகளோ வரவர அதிக பயத்தை யுண்டாக்கத் தக்கவைகளாகவே யிருந்தன.

ஆகையால் இராணி முதலியவர்கள் அங்கு சபை கூடியபோது யாவர் முகத்திலும் திகிலும் துயரமுமே நிறைந்திருந்தன. எந்நேரமும் சந்தோஷமாய்க் கேளிக்கையிலேயே இருக்கும் சித்ராங்கியே முகவாட்ட மடைந்து சோர்ந்து விட்டாளெனின் நாம் மற்ற பேரைப்பற்றிக்கூற வேண்டுவதில்லை. அக்கூட்டத்தில் உண்மையாகப் பீதியடையாமல் இருந்தவன் இராகவன் ஒருவன். ஆனால் அவனும் துயரமுடையவன்போல் அபிநயம் செய்து கொண்டிருந்தான். ஏனெனில் அவன் தன் கோரிக்கை நிறைவேற எதிர்பார்த்திருந்தது இத்தகைய சமயமே. ஆகையால் மிக்க ஆவலோடு நடக்கும் விஷயங்களைக் கவனித்துக்கொண் டிருந்தான். புண்ணிய கோடிப் பிரபுமட்டும் அத்தகைய சமையத்தில் ஒரு சுத்தவீரன் எப்படி யிருப்பானோ அவ்வாறு பொறுமையோடும் தைரியத்தோடும் யாவற்றையும் கவனித்துக்கொண் டிருந்தான். இராஜசபைக் காரியதரிசியோ தன் பயத்தை மறைக்கக் கூடாதவராய் இருந்தார். அவர் தேகம் நடுக்கமெடுத்துக் கொண்டது.

டாக்டர் முதல்முதல் பேசத்தொடங்கி "நமது எதிரிகள் சுறுசுறுப்பாய் வேலைசெய்கிறார்கள். நாம் இப்போது துணிகரமாய் நடந்து கொள்ள வேண்டும். பயப்படக்கூடாது. ஜனங்களுடைய இத்துஷ்டத் தனத்தை யிப்போதே யடியோ டடக்கிவிடா விட்டால் பிறகு நடப்பதற்கு நான் பொறுப்பாளியல்ல" என்றான்.

சித்ராங்கி "ஏன்? துருப்புகளைக் கொண்டு அடக்கலாகாதோ?" என்றாள்.

டாக்டர் "இப்போதே துருப்புகளைப் பூராய் நம்பிவிடக்கூடாது. தாழ்ந்த வகுப்புச் சனங்கள் இப்போது வந்த கொள்ளைநோய் இராஜசபையில் நடக்கும் அக்கிரமத்திற்காகக் கடவுளே செய்யும் தண்டனையென்று நம்பிக்கொண் டிருக்கிறார்கள். நமது எதிரிகள் அந்த நம்பிக்கையவர்களுக்கு ஸ்திரப்படும்படி தந்திரமாய் வேவுகாரர் மூலமாகக் கலகம்செய் திருக்கிறார்கள். ஆகையால் போர்வீரர்களும் பெரும்பாலும் அந்த வதந்தியையே நம்பிக் கொண்டு அவர்களோடேயே சேர்ந்து கொள்வார்கள்." என்றார்.

புண்ணியகோடிப்பிரபு:—"ஏன் துஷ்டகேது முதலியவர்கள் தானே இத்தகைய கலகத்தை யுண்டாக்கினர்கள். அவர்களைப் பிடித்து விட்டால் இது அடங்கிவிடுகிறது, அதற்காக வாரண்ட் என்னிடம் கொடுத்தால் நான் பிடித்துக் கொண்டு வருகிறேன்" என்றான்.

டாக்டர்:—"அப்படிச் செய்தால் மாயசிங்கன் கூட்டத்தைச் சேர்ந்த கள்ளர்கள் அவர்களை விடுவிக்க வந்து விடுவார்கள். அதை யறிந்த ஜனங்கள் தங்கள் கோபத்தீயில் நெய்விட்டது போல மிக்க தீட்சணியமடைந்து விடுவார்கள்." என்றார்.

புண்ணியகோடிப்பிரபு:-"இப்படிச் செய்யாவிட்டால் மட்டும் மாயசிங்கன் சும்மா இருந்து விடுவான் என்பது என்ன நிச்சயம்?" என்றான்.

டாக்டர் "மாயசிங்கனுக்கு இப்போது கொடுமை செய்யும் விஷயங்களில் பிரவேசிக்கப் பிரியமில்லை யென்ற சங்கதி எனக்குத் தெரியும். ஆனல் துஷ்டகேது கட்சிக்கு நாம் இப்போது கெடுதி செய்வதாயின் மாயசிங்கன் பகிரங்கமாய் விரோதியாகக் கிளம்பி விடுவான்" என்றார்.

அச்சமயம் இராணி "இவ்வள வென்ன? நானே நேரில் சென்று என்குடிகளிடம் என்னை யொப்புவித்துப் பேசுகிறேன். உங்களுக்குக் கோபமிருந்தால் என்னை யென்ன வேண்டுமாயினும் செய்யுங்கள். ஆனல் என் நண்பர்களை யொன்றும் செய்யவேண்டாம் என்று கூறுகிறேன்" என்றாள். அதைக் கேட்ட யாவர்மனமும் கரைந்து விட்டது.

புண்ணியகோடிப் பிரபு: "மகாராணி! அப்படி யொருபோதும் நடக்கலாகாது. தங்கள்குடிகளில் இராஜ பக்தியுடைய நான் ஜனங்களின் முன்சென்று சங்கதியைக் கூறுகிறேன்" என்றான்.

இராணி அவனுக்குத் தக்கவிதமாய் வந்தனமளித்து "அப்படியாயினும் தாங்கள் பிராணபத்திற் குள்ளாக லாகாது" என்றாள்.

இரத்னங்கி "அப்புறம் என்னதான் செய்வது?" என்றாள்.

பத்மநாயகி தன் புதல்வனை நோக்கி "எல்லாரும் பேசும்போது என் புத்திரன் மட்டும் ஏன் மௌனம் சாதிக்க வேண்டும்? ஏன் தனக்குத் தோன்றும் யோசனையைக் கூறலாகாது?" என்றாள். உடனே இராணியும்

அவனை நோக்கி "ஆம் உன் யோசனை யென்ன? கூறு" என்றாள். மறுகிமிடம் இராணி,

"ஆ!" என்று துள்ளி எழுந்து இரண்டொரு நிமிடம் தலைசாய்த்து எதையோ உற்றுக்கேட்டு" "ஓ! பெருஞ் சத்தம். பல்லாயிரம் ஜனங்கள் போடும் கூச்சல். ஜனங்கள் அரண்மனையை நோக்கி வருகிறார்கள்" என்று நடுக்கத்தோடு கூறினாள்.

டாக்டர் உடனே சுறுசுறுப்போடெழுந்து "அப்படியானால் இப்போது திருப்புகளை நம்பவேண்டியது அவசியமே" என்றார்.

இதுகாறும் பேசாமலிருந்த இராகவன் தான் எதிர்பார்த்திருந்த சமயம் வந்து விட்டதையுணர்ந்து, எழுந்து நின்று யாவரையும் நோக்கி "ஒரு வார்த்தை, நான் இதுகாறும் பேசாமலிருந்த காரணம் யாராவதொருவர் முடிவான யோசனை கூறுவீர்களென்று கருதியதேயாகும். யாரும் கூறக்காணோம். ஆகையால் இப்போது நான் பேச வேண்டிய முறை. இச்சமயம் என் யோசனைகளை விவரமாய்க்கூற அவகாசமில்லை" என்று இராணியை நோக்கி,

"மகாராணியவர்களே! இச்சமயம் தாங்கள் என் மேல் பூரண நம்பிக்கைவைத்து எனக்குச் சர்வ அதிகாரம் கொடும். நான் இக்கலகத்தை யடக்கி விடுகிறேன்" என்றான்.

இராணி "அவ்வாறே யளித்திருக்கிறேன்" என்றாள். டாக்டரும் "ஆம் நாங்களும் சந்தோஷமாய் உனக்கு அதிகார மளிக்கிறோம்" என்றார். இராகவன் உடனே அங்கிருந்து வெளிப்படும் போது "இதோபார் நானே ஜெயமடைந்து உன்னைத் தோற்கச் செய்தேன்" என்று கூறுவதுபோல் புண்ணியகோடிப் பிரபுவை யுற்றுநோக்கி விட்டுச் சென்றான்.

இராகவன் அவ்வாறுபார்த்ததால் புண்ணியகோடிப் பிரபு அப்போது தான் முதல் முதல் "ஓகோ இந்த இழி குலப்பயல் அகாரணமாய் நம்மேற் பொறாமை கொண்டிருக்கிறான் என்று அறிந்தார். அவர் பெருந்தன்மை வாய்ந்தவ ரானதால் அவனையொரு இலட்சியமாய்க் கருதவில்லை.

இதற்குள் வெளியில் கூச்சல் அதிகமாய் விட்டது. சத்தம்மிக்கபயங்கரமாகவிருந்தது. "அமரநாதன் கொலையாளிகள்மேல் வஞ்சம்! வஞ்சம்!" என்று அடிக்கடி பெருங்கூச்சல் கிளம்புவது அவ்வீதியே இடிந்து விழுந்து விடும்போ லிருந்தது. ஜனக்கூட்டம் வீதி நிறையநெருங்கி வந்தது. ஆச்சு முன்னே வருகிறவர்கள் அரண்மனைக்குச் சுமார் நூறுகஜ தூரத்தில் நெருங்கி விட்டார்கள். அச்சமயம் அரண்மனையின் எதிரிலிருந்த மடிப்புக்கதவுகள் திறக்கப்பட்டும் இராகவன் பூரண உடையணிந்து கையில் வெள்ளைக் கொடிபிடித்து அழகிய ஒரு புரவியின்மேலேறிக்கொண்டு வெளியில் வந்தான். ஆனால் அவன் நிராயுதபாணியா யிருந்தான்.

ஜனங்கள் சமாதானக் கொடியோடுவரும் அவனைக் கண்டதும் ஏககாலத்தில் தட்டென்று நின்றார்கள், "ஆ! இராணியின் கள்ளப்புருடன், சோரபுருடன், அவனைப்பிடியுங்கள்" என்றும், "செம்படத்தி மகனைப் பிடித்துத் தூக்குமரத்திற்குக் கொண்டு வாருங்கள்" என்றும், "ஆம் ஆம். அமரநாதன் கொலையாளிகளில் இவனும் ஒருவன், பிடியுங்கள்" என்றும் கோபம் பொருந்திய சத்தங்கள் கிளம்பின. உடனே பலபேர் உக்கிரங்கொண்ட புலிகள் போல் இராகவனை நோக்கிப் பாய்ந்து வந்தார்கள்.

இராகவன் சாந்தமாகவும் தைரியமாகவும் தன் குதிரையை நிறுத்தி அங்கு படிகளின்மேல் நின்று ஜனங்களை

நோக்கி வந்தனமளித்து உரத்தசத்தமாக, "ஜனங்களே! நயனபுரிவாசிகள் சுத்தவீரர்களென்று உலகப்பிரசித்தி பெற்றவர்கள். நீங்கள் கொலைபாதகரல்ல. பூரணமாய் உங்கள் உதாரகுணத்தையும் சத்திய நெறியையும் நம்பிச் சமாதானக் கொடியோடு நிராயுதபாணியாய் உங்களிடம் வந்த ஒருவனைக் கொல்லும் குணம் உங்களிடமில்லை" என்றதே " ஆம் ஆம். இருங்கள் பொறுங்கள் அவன் சொல்வதை முன்னே கேட்டுக் கொள்வோம்" என்று ஒரு கூச்சல் கிளம்பியது.

இராகவன் உங்களுங்கு ஆயிரம் வந்தனங்களளிக்கிறேன். நீதவான்களாகிய நீங்களே சற்று பொறுமையாய் நான் கூறுவதைக் கேளுங்கள். அதன் பிறகு அது உங்களுக்குத் திருப்திப்படா விட்டால் என்னை யுங்கள் பிரியப்படி என்னவேண்டு மாயினும் செய்து கொள்ளுங்கள்" என்றான். தங்களையே நியாயாதிபதிகளாய்க் கோரிக் கொள்கிறான் என்பதால் சற்று சந்தோஷமடைந்த ஜனங்களில் பெரும்பாலார். "ஆம் அவன் கூறுவது சரிதான். அவன் சொல்கிறதைச் சொல்லட்டும்" என்றார்கள்.

சிலர் மட்டும் "சேசே! அவனும் கொலைசெய்தவனே பிடியுங்கள்! பிடியுங்கள்!" என்றார்கள். முதலில் கூறியவர்கள், "பொறுங்கள். பேசாமலிருங்கள்" என்று கூவினார்கள். உடனே சந்தடியடங்கிற்று.

இராகவன்:—ஜனங்களே! நீங்கள் நியாயத்திற்குக் கட்டுப்பட்டவர்களென்றும் சத்தியவான்களென்றும், பாரபட்ச மில்லாதவர்களென்றும் பிரசித்தி பெற்றவர்கள். நான் உங்களிடமே சரண்புகுகிறேன். தயவுசெய்து நான் கூறும் மொழிகளைச் சற்று பொறுமையாய்க் கேளுங்கள். நான் உங்களைச்சேர்ந்த உங்கள் சகோதரனே. பிரபு மகனல்ல. ஏழைச் செம்படவன் மகனே. உங்களில்

சிலர் அமரநாதன் கொலையில் நான் சம்பந்தப்பட்டவ னென்று என்மேற் குற்றம் சாட்டுகிறீர்கள். சற்று சிந் தித்துப் பாருங்கள். கொலை நடந்தது உண்மையாகவே யிருப்பினும் நான் அதில் சம்பந்தப்பட்டவனாக இருந்தி ருக்க முடியாது. ஏனெனில் அந்த இரவுதான் நான்கள்ளக் கூட்டத்தை யழிப்பதற்காகத் துருப்புகளோடு நகரை விட்டுச் சென்றிருந்தேன் என்பதற்கு ஆயிரக் கணக்கான சாட்சிகளிருக்கிறார்கள்....'' என்றபோது,

"ஆம் ஆம். அவமான மடைந்து வந்தது'' என்று ஒரு சத்தமுண்டாயிற்று. அச்சமயம் ஜனக்கூட்டத்தில் மேடான ஒரு இடத்தில் ஒரு புறமாக நின்றுகொண் டிருந்த நான்குபேர் "ஆயினும் இராகவப் பிரபு சுத்த வீரரே'' என்று கெட்டியாய்க் கூறினார்கள். இராகவன் அத்திக்கை நோக்கியபோது அந்த நால்வர் முகங்களையும் தான் எங்கோ பார்த்திருப்பதாக அவன் மனதிற்குப் புலப்பட்டது. அதற்குள் ஜனக்கூட்டத்தினின்று. "இருக் கட்டும். அவன் கூறுவதைக் கேளுங்கள்'' என்று கூச் சல் கிளம்பியது.

இராகவன் "நான் கூறுவதைச் சற்று பொறுமை யாகக் கேளுங்கள். நான் கொலையாளியாக இருக்கவில்லை யென்பதற்கு இன்னொரு முக்கியமான காரண மிருக்கி றது. ஓ உத்தம புருடர்களே! நீதிப்படி குற்றமிருக்கிற தென்று சந்தேகமற அறிந்த பின்பே தண்டிக்கும் நீதி யுடைய நீங்களே உங்கள் இராணிக்கும் அவர்கள் மேற் குற்றம் சாட்டுவோர்களுக்கும் இடையில்நியாயாதிபதியா யிருங்கள். வேறு நியாயாதிபதிகள் தேவையில்லை. நான் உறுதியாய்க் கூறுவதாவது, அமரநாதன் கொலைசெய்யப் படவேயில்லை. அந்தோ! நிரபராதியாகிய உங்கள் இரா ணியின்மேல் அவர்களுடைய விரோதிகள் இந்த அபா

ண்டமான படுகொலைக் குற்றத்தைச் சுமத்தி யிருக்கிறார்கள். நான் கேட்டுக் கொள்கிறபடி சுத்தவீரத் தன்மைக்குப் பொருத்தமான நீதிச் சோதனையின்படி உங்கள் முன்னிலையில் அத்தாட்சி யேற்படும்வரை தயவுசெய்து உங்கள் தீர்மானத்தை யொத்தி வையுங்கள்; எதிரிகளால் உண்டாக்கப்பட்ட பொய்யான வதந்தியைமட்டும் கேட்டுக் குற்றமற்ற உங்கள் இராணிக்குத் துன்பமிழைக்கும் பாபத்திற் குள்ளாகாதீர்கள்——" என்றதே, "ஆம்ஆம் நாம் கொஞ்சம் அவசரமே பட்டு விட்டோம்" என்றும், "அவன் கூறுவதை முழுதும் கேளுங்கள்" என்றும் கூச்சல்கள் கிளம்பின.

தங்களைப்பற்றி உயர்வாகவும் புகழ்ச்சியாகவும் கூறி, தங்களை முழுமைக்கும் நியாயாதிபதிகளாக ஒப்புக்கொண்டு இராகவன் கூறிய மிக்க தந்திரமான மொழிகளைக் கேட்டதே ஜனங்களில் பெரும் பாலாருடைய ஆத்திரம் தணிந்து விட்டது. ஆனால் எப்போது கலகம் உண்டாகுமோ, அச்சமயம் பார்த்துக் கொள்ளை யடிக்கவேண்டும் என்ற எண்ணத்தைக் கொண்டே வந்திருந்த வெளிச்சனங்கள் மட்டும், "எங்கே கலகம் அடங்கிவிடுமோ, கொள்ளையடிக்கச் சமயம் வாய்க்காது போய்விடுமோ" என்ற பயத்தால் "இல்லை இல்லை, மோசம் மோசம், தந்திரம் செய்கிறான்" என்று கூவினார்கள். ஆயினும் மற்ற ஜனங்கள் "அவன் என்னதான் கூறுகிறான். என்பதை யறிவோம், பொறுங்கள்! பொறுங்கள்!" என்று கூச்சலிட மறுபடி சற்று சந்தடியடங்கிற்று

இராகவன் "நான் கூறுவது உங்களுக்குச் சந்தோஷத்தை யுண்டாக்கும் விஷயமே. அதாவது உங்களுக்குப் பிரியமான சுத்தவீரத் தன்மைக்குரிய நீதிப்படி இராணி நிரபராதி என்று நான் உறுதியாய்க் கூறுகிறேன்.

எதிரிகளில் எவனாவது இராணியின்மேல் அத்தகைய அபாண்டத்தைக் கூறத்துணிந்து என் முன் வருவானாயின் அவனை யெதிர்த்துப் போர்புரிய நான் ஆயத்தமாகவிருக்கிறேன். ஆம் நாளை முதல் மூன்று நாட்கள்பகிரங்கமான ஒரு வெளிப் பிரதேசத்தில் நீங்களே நியாயாதிபதிகளாக உட்காருங்கள். உங்கள் முன்னிலையில் இராணியின்மேல் குற்றங் கூறவரும் ஒவ்வொருவனோடும் நான் ஒருவனே யுத்தம் புரிந்து என் ஜெயத்தால் இராணி நிரபராதி யென்பதை நிரூபிக்கிறேன்" என்று மொழிந்தான்.

அந்த நாடுகளில் அக்காலத்தில் ஒரு வழக்கமுண்டு, அதாவது நியாயம் அநியாயம், குற்றவாளி நிரபராதி இந்த விஷயங்களில் ஐய்யம் நேர்ந்தால் எதிரிகள் சண்டையிடுவதும், நியாயம் இருக்கும் கட்சிக்கே கடவுள் உதவிசெய்வார் என்ற நம்பிக்கையால் ஜெயித்தவனே உண்மையாள் அல்லது நிரபராதி என்று நிச்சயித்து விடுவதும் வழக்கமாக விருந்தது.

இச்சந்தர்ப்பத்தில் இராணியே குற்றம் சாட்டப்படுவதாலும் இராணியின் பட்சத்தில் இராகவன் நின்று சண்டைசெய்து இராணி நிரபராதியென்று ருசுப்படுத்தப்போவதாலும், இதில் பலர் இராணிமேல் குற்றம் சாட்டி யுத்தத்திற்கு வரலாகுமாதலாலும் இவ்விஷயம் பெரிய திருவிழாப்போல் நடக்கும். ஓர் விசாலமான மைதானத்தில் இச்சண்டை நடக்கும். அன்று ஜனங்களுக்குப் பரிசுகள், தின்பண்டங்கள் முதலியவை யளிக்கப்படும். சண்டை நடக்குமிடத்தில் பலவிதக் கடைகள், ஹோட்டல்கள், விளையாட்டுகள் யாவும் பெரிய வேடிக்கையாய் நடக்கும். இவற்றையெல்லாம் கருதிச் சந்தோஷமடைந்த ஜனங்களில் ஓர்சாரார்,

"சரி சரி; நாங்கள் இந்த ஏற்பாட்டிற்குச் சம்மதிக்கி

சென்னை-600 008

ளோம்'' என்று ஆரவாரித்தார்கள். ஆனால் கொள்ளைக்கு எதிர்பார்த்திருந்த மற்றொரு கட்சியைச் சேர்ந்தவர்கள் "இல்லையில்லை. இவன் வீண்காலதாமதம் செய்து ஏமாற்ற வந்தான். அன்று சேனைகளை யழைத்துவந்து நம்மைத் தாக்கிய கொலை பாதகன். இவனைப் பிடியுங்கள். டாக்டர், பத்மநாயகி இவர்களைக் கொல்லுங்கள். நேராய் அரண்மனைக்கு செல்லுங்கள்! செல்லுங்கள்!'' என்று கூச்சலிட்டார்கள்.

இதுகாறும் இராகவன் பேசியயாவும் அரண்மனையின் மேல்மாடியிலுள்ள இராணி முதலியவர்கள் கவனமாய்க் கேட்டுக்கொண்டிருந்தார்கள். இராகவன் பேசும்போது ஜனங்களின் கோபம் கொஞ்சம் கொஞ்சமாகத் தணிவதைக்கண்டு சற்று மனோ நிம்மதியடைந்தார்கள். கடைசியில் ஜனங்கள் இராகவன் ஏற்பாட்டிற்குச் சம்மதித்தபோது இராணி முதலியவர்களுக்குச் சற்று சந்தோஷமே யுண்டாயிற்று. ஆனால் மறுநிமிடம் எல்லாம் திகிலும் குழப்பமுமாய் மாறிவிட்டன.

ஜனங்களின் கூச்சல் அதிகமாய்விட்டது. அவர்களுக்குள்ள இரண்டு கட்சிகளுக்கும் சச்சரவு உண்டாய் விட்டது. கலகம் நடக்கவேண்டுமென்ற நோக்கமுடையோர் மற்ற ஜனங்களைத் தள்ளிக்கொண்டு "போங்கள் அரண்மனைக்கு! நேரே அரண்மனைக்குச் செல்லுங்கள்! கொல் இராணியை! கொல் டாக்டரை!'' என்று கூவிக் கொண்டே தடுக்க முடியாத வெள்ளம்போல் சென்றார்கள்.

அக்கூட்டத்தில் அழகிய வாலிபன் ஒருவன் இருந்தான். அவன் வீதிவழியே சென்றுகொண்டிருந்தவன் அக்கூட்டத்தில் தற்செயலாய்ச் சிக்கிக்கொண்டான். அவன் பெரிய ஆற்று வெள்ளத்தில் தள்ளிக்கொண்டு

போசப்பட்டவன்போல் அக்கூட்டத்தினின்று பிரிந்து கொள்ளமுடியாமல் கூடவே சென்றான். பிறகு நடந்த சம்பவங்களால் ஏதோ விசேஷமிருக்கிறதென்று கவனித்துக்கொண்டிருந்தான். ஜனங்கள் கடைசியில் "கொல்லுங்கள் டாக்டர் தங்கவேலுப்பிள்ளையை" என்று கூவியதைக் கேட்டதே அவன் மனம் பதைத்துவிட்டது. டாக்டரைப்பற்றி அவன் அறிந்தவரையில் அவருடைய அயோக்கிய நடத்தை சற்றும் அவனுக்குத் தெரியாதாகையால் அவர் அமரநாதனைக் கொன்றவர்களில் சேர்ந்திருப்பார் என்று அவன் நம்பவில்லை. அமரநாதன் கொல்லப்பட்டான் என்பதையே அவன் நம்பவில்லை.

ஆகையால் வாலிபனாகிய நமது வில்வநாதன் மிக்க மனக்குழப்பத்தோடு கஷ்டப்பட்டுக்கொண்டு அக்கும்பலினின்றும் பிரிய முயற்சி செய்துகொண்டிருக்கையில் யாரோ பின்னாலிருந்து தன்தோளைப் பற்றியதை யறிந்து திரும்பிப்பார்த்தான். பூபாலன் அவனை நோக்கி "நீ டாக்டர் தங்கவேலுப்பிள்ளையைக் காப்பாற்றக் கருதுகிறாய். என் கூடவா" என்று அவன் கரத்தைப்பிடித்துக் கொண்டு அருகிலிருந்த ஒரு சிறு சந்தின் வழியாய்ச் சென்றான். வில்வநாதன் பேசாமல் அவன் கூடவே சென்றான். இருவரும் அச்சந்தைக் கடந்து அடுத்த வீதியில் நுழைந்து அங்கிருந்த ஒரு தோட்டத்தினருகிற் சென்றார்கள். அது அரண்மனையைச் சூழ்ந்திருக்கும் மதில் சுவர்களில் ஒரு பக்கச் சுவரின் ஓரத்திலிருக்கிறது. அங்கு சென்றதும் பூபாலன் வில்வநாதனை நோக்கி நீயொன்றுக் குமஞ்சவேண்டாம். இதோ இதை யெடுத்து ஊது என்று வில்வநாதன் இடுப்பில் தொங்கும் அத்தங்க ஊதுகுழலைக் குறிப்பாய்க் காட்டிவிட்டு அவன் பதில் கூறுவதற்குக்கூட எதிர் பார்க்காமல் துரிதமாய்ப்போய்விட்டான்.

வில்வநாதன் திப்பிரமை யடைந்து என்ன செய்ய லாம் என்று சிந்தித்தான். இரண்டு மூன்று நிமிடங்க ளுக்குள் ஜனங்களின் பயங்கரமான பெருங்கோஷ்டமும் அவர்கள் அரண்மனையில் வெளியிலிருக்கும் பலமான கத வைத்தாக்கும் சத்தமும் அவன் செவிகளில் வீழ்ந்தன. அச்சமயம் இராகவன் அதிவேகமாகக் குதிரையின்மேல் அவ்வழியே வருவதையும் அவன் பின்னல் சில ஜனங்கள் அவனைத் துரத்திக்கொண்டும், பயங்கரமான வார்த்தை களால் நில் நில் என்று அதட்டிக்கொண்டும் வருவதைக் கண்டான்.

வில்வநாதன் இருக்குமிடத்தின் சமீபத்தில் வரும் போது இராகவன் குதிரை காலிடறித் துள்ளியதால் இரா கவன் தரையில் தள்ளப்பட்டு மூர்ச்சை யடைந்தான். இதைக் கண்டதே பின்னல் வரும் கோபவெறிகொண்ட ஜனங்கள் சந்தோஷ ஆரவாரம் செய்துகொண்டு பாய்ந்து வரத் தொடங்கினர்கள். வில்வநாதன் வீரத்தன்மை யுடைய இராகவனையும் ஜனங்களையும் படுகொலையினின்று காப்பாற்றவேண்டுமென்ற ஒரே எண்ணத்தோடு தன் குழலை யெடுத்துக் கெட்டியாய் ஊதினன். அச்சத்தம் அங்குள்ள வீதிகளிலும் மிக்க தூரத்திலும் பிரதிபலித்தது. அரண்மனையிலும் அது கேட்டது.

29-வது அத்தியாயம்

இராகவன் காப்பாற்றப்படல்- ஆச்சரியமான சம்பவங்கள்- இராகவனும் வில்வநாதனும்—அரண்மனையில் நடந்த குழப்பமும் உண்டான கலவரமும்—வில்வநாதன் அரண்மனைக்கேகி பத்மநாயகியை மறுபடி சந்தித்தல்—இராணி மாயசிங்கனைக் காணல்.

ஊது குழலின் சத்தத்தைக் கேட்டதே இராகவன் விழுந்திருந்த விடத்தை நோக்கி ஆவலோடும் ஆத்திரத்தோடும் ஒடிவந்த ஜனங்கள் தட்டென்று நின்று மெதுவாய் நகரத்தொடங்கினார்கள். அச்சத்தம் அடங்குவதற்குள் தபதபவென்று குதிரைகள் வரும் காலடிச்சத்தம் கேட்டது. இரண்டொரு வினாடிகளுக்குள் அச்சுதன், ஜக்கன், கிருஷ்ணன் மூவராலும் நடத்தப்பட்ட மாயசிங்கன் வீரர்கள் கூட்டமாய்ப் பாதையின் இருபுறங்களிலும் நெருங்கி வந்தார்கள். அவர்களைக் கண்டதே ஜனங்கள் பிரமித்து நின்று விட்டார்கள். ஏனெனில் நமது வில்வநாதனுடைய ஊதுகுழல் சத்தங்கேட்டபோதே அவர்கள் அது நமக்கு அனுகூல மானதோ பிரதி கூலமானதோ வென்று அறியக்கூடாது மயங்கினார்கள். இப்போது பூரண ஆயுதபாணிகளாகிய இவர்களைக் கண்டதும் இவர்கள் எந்தக்கட்சிக்கு உதவியாக வந்தவர்களென்று அறியக்கூடாமல் மயங்கி நின்றார்கள்.

மாயசிங்கன் ஆட்கள் வில்வநாதனருகில் வந்ததும் நின்றார்கள். அப்போது வில்வநாதன் இராகவனுக்கு உபசாரம் செய்துகொண் டிருந்தான். அச்சுதன் அவனை நோக்கி "வாலிபரே! உம்முடைய கட்டளையென்ன?" என்றான். வில்வநாதன் "அந்தோ! இச்சனங்களால் நடக்

கப்போகும் கொலை கொள்ளை யிக்கோர சம்பவங்கள் நடக்கவொட்டாது தடுக்கவேண்டும்'' என்றான்.

அச்சுதன் "உன் பிரியப்படியே யாகட்டும்" என்று கூறி விட்டு ஜக்கனை விளித்து "நீ யுடனே நமது ஆட்க ளில் முக்கால் பங்கை யழைத்துக் கொண்டுபோய் அரண் மனையைத் தாக்கிக்கொண்டிருக்கும் ஜனங்களை அவ்வாறு செய்யவொட்டாமல் தடுத்துவிடு. நமது வீரர்பெயரைப் பயமின்றி யுபயோகி. 'விரோதிகளைக் கூட இவ்வாறு கொலைசெய்வது மாயசிங்கனுக்குச் சற்றும் சம்மதமில்லை, என்று கூறு. அதோடு இராகவப்பிரபு கடைசியில் கூறிய நிபந்தனையை யாவரும் ஒப்புக்கொள்ள வேண்டும் என்று நமது தலைவர் கூறுவதாய்க்கூறு'' என்று கட்டளையிட் டான். ஜக்கன் அவ்வாறே உடனே தன் ஆட்களையழைத் துச் சென்றான். சற்று நேரத்திற்குள் இவ்வாறுகட்டளை யிடுகிறவன் மாயசிங்கனுடைய பிரதம படைத்தலைவன் என்ற சங்கதி ஜனங்களுக் கெல்லாம் தெரிந்து விட்டது. அரண்மனையைத் தாக்கிக்கொண் டிருந்தவர்கள் தட்டெ ன்று அத்தொழிலைக் கைவிட்டார்கள்.

"மாயசிங்கன் படைத்தலைவனே இப்படிக் கூறுகி றான். மாயசிங்கன் கட்டளைப்படி நாம் நடக்கவேண்டும். மாயசிங்கன் ஏழைகளுக்கு நண்பன். நமது இடுக்கண் களை யவன் நீக்குகிறான். ஏழைகளுக்கு அக்கிரமம் செய் யும் செல்வவந்தராகிய பிரபுக்களையும் அதிகாரிகளை யும் அவன் தண்டிக்கிறான். அப்படியே அவன் சொற் படி நடக்காவிடின் நம்மையும் தண்டிப்பான். மாயசிங்க னிடம் அதிகாரம் பெற்றவர்கள் சொல்லை நாம் கேட்க வேண்டும்———" என்ற இவ்விதமான பேச்சு ஜனங்க ளுக்குள் எங்கும் நிகழ்ந்தது. சற்று நேரத்திற்கு முன்பு அவர்களுக்கிருந்த கொடியகோபம் கொந்தளிக்கும் ஜலத்

தில் எண்ணெ யூற்றியதுபோல் அடங்கிவிட அவர்கள் திரும்பிப் பலவீதிகளின் வழியாகப் பிரிந்து செல்லத் தொடங்கினர்கள்.

இராகவன் ஸ்மரணைவந்ததும் எழுந்து மெதுவாய் நோக்கினன். உடனே "பயப்படாதே, சிநேகர்களிட மிருக்கிறாய், காப்பாற்றப்பட்டாய்" என்று தன்செவிக ளில் யாரோகூறியதைக் கேட்டதும் தலைநிமிர்ந்து திரும் பிப்பார்த்து, தன் அருகில் ஒரு அழகிய வாலிபன் நிற்ப தைக் கண்டான். அதோடு எதிரில் நிற்கும் குதிரைவீரர் களைக் கண்டதும் ஜனக்கூட்டத்தில் தான் கண்ட உருவங் களே யென்று அறிந்துகொண்டு "ஆ இந்த வீரர்கள், இவர்களைப் பார்த்திருக்கிறேன். இவர்கள், மாயசிங்கனு டைய ஆட்கள்" என்றான்.

வில்வநாதன் "ஆம் நீர் காப்பாற்றப் பட்டதற்காக அவர்களுக்கே தாங்கள் வந்தனமளிக்க வேண்டியவராக இருக்கிறீர்" என்றான்.

அச்சுதன் "வாலிபரே! முதலில் இராகவப் பிரபு வின் வந்தனம் உமக்கே யுரியது. ஏனெனில் நீர் அந்த ஊதுகுழலை யூதியதுதான் நாங்கள் இங்கு உதவிசெய்ய வந்ததற்குக் காரணம். இன்னும் இராகவப் பிரபு சமயம் கிடைக்கும்போது அரண்மனையில் படுகொலைகளும் கொள் ளையும் நேராமல் இராணி முதலியவர்கள் இன்று காப் பாற்றப்பட்டதற்கு இராணியின் வந்தனம் உமக்கே உரிய தென்று இராணிக்கு அறிவிப்பார் என்று நம்புகிறேன்" என்றான்.

இச்சம்பாஷணையால் "இன்று இக்கலகம் நிறுத்தப் பட்டது, நாம் குரூரமான கொலையினின்று காப்பாற்றப் பட்டது, இராணியும் மற்றபேர்களும் உயிர் தப்பியது

யாவும் இவ்வாலிபனாலேயே" என்று இராகவன் சிந்தித்துக் கொண்டான்.

அச்சமயம் ஒரு வீரன் அங்குவந்து அச்சுதனை நோக்கி "அரண்மனை காப்பாற்றப்பட்டது; கலகம் அடக்கப்பட்டு ஜனங்களெல்லாம் கோபமடங்கித் திரும்பிச் செல்கிறார்கள். இராகவப் பிரபு கூறியபடிக்கே மூன்று நாள் பகிரங்கமாக யுத்தம் நடக்கப்போகிறதென்ற நிச்சயமே ஜனங்களுக்குள் ஏற்பட்டு விட்டது" என்றான். அச்சுதன் "பேஷ்! இனி நமது ஆட்களையெல்லாம் ஒரு பக்கமாய்ச் சேர்க்கும்படி ஜக்கனிடம் கூறு; சிலபேர்கள் மட்டும் அரண்மனை வீதியில் இரகசியமாகவே காவலாக விருக்கட்டும். நீ போகலாம்" என்றான்.

அச்சுதன் உடனே வில்வநாதனுக்கு வந்தனமளித்துவிட்டு அவன் வந்தனமளிப்பதற்குள் குதிரையை வேகமாக விட்டுக்கொண்டு சென்றான். இராகவனுக்குத் தான் மாயசிங்கன் ஆட்களால் காப்பாற்றப்பட்ட விஷயம் மிக்க வியப்பாகவும் மனக்கலக்கமாகவு மிருந்தது. குகையில் கண்ட அற்புதக்காட்சியில் மாயசிங்கன் தோன்றி "இராகவா! நீ காப்பாற்றப்பட்டாய்" என்று கூறிய வார்த்தைகள் அவன் நினைவிற்கு வந்தன. அதற்குள் அவன் தன்னைக் காப்பாற்றிய வாலிபனை நினைத்துக்கொண்டு "ஆ! வாலிபரே என்னை யித்தகைய பிராணபத்தினின்றும் காப்பாற்றியதற்காக நான் மிக்க நன்றிபாராட்டுகிறேன். உம்முடைய நாமதேயமென்ன? கூறவேண்டும்" என்றான். வில்வநாதன் தன் பெயர் "வில்வநாதன்" என்றதே அதைக்கேட்ட இராகவன் மிக்க வியப்பும் சந்தோஷமு மடைந்து,

"என்ன? டாக்டர் தங்கவேலுப்பிள்ளை வீட்டில் இருக்கும் வில்வநாதனா?" என்றான். வில்வநாதன் "ஆம்

ஆம்; அதே ஆள்தான்'' என்றான். இராகவன் "ஆ! சரி தான். நீ இத்தகைய மிக்க உத்தமகுணவானாகவும், மிக்க அழகு வாய்ந்தவனாகவும் இருப்பதால் தான் அவர் உன்னைப்பற்றி அவ்வளவு புகழ்ந்து கூறுகிறார். அவர் உன்னை இராஜமாளிகைக்கு அழைத்துவர மறுத்து விட்டது அதிசயமல்ல வென்று இப்போ தறிந்துகொண்டேன். நீதயவு செய்து என்கூட அரண்மனைக்கு வந்து இராணியின் வந்தனத்தை யேற்றுக்கொள்ள வேண்டும்'' என்றான்.

வில்வநாதன் "பரவாயில்லை. நான் சாதாரணமாய் எத்தகைய நியாய விசுவாசியும் செய்யக் கடமைப்பட்ட காரியத்தையே செய்தேனன்றி விசேஷம் ஒன்றும்செய்து விடவில்லை'' என்றான். இராகவன் "ஓ இல்லையில்லை. இத்தகைய பேருதவிசெய்த உன்னை நான் கூடவே யழைத்துச் செல்லாவிடின் இராணி யென்மேல் கட்டாயம் கோபங்கொள்வாள். டாக்டரும் இத்தகைய சந்தர்ப்பத்தில் நான் உன்னை யரண்மனைக்கு அழைத்து வந்ததற்காக ஒரு போதும் கோபித்துக் கொள்ளவே மாட்டார். மேலும் என்தாயார் உனக்கு வந்தனமளிக்கப் பிரியப்படுவாள்'' என்றான்.

வில்வநாதன் சற்று சிந்தித்துப் பார்த்தான். இவன் இவ்வளவு தூரம் கூறும்போது நாம் மறுத்துக் கூறுவது வீண் தற்பெருமையாய்த் தோன்று மென்று கருதினான். மேலும் "நாம்! அன்றிரவு அரண்மனையில் சந்தித்த கம்பீரத்தோற்ற முடைய மாது யார் என்ற சந்தேகம் நாம் அங்குசெல்வதால் நிவர்த்தியாகக்கூடும்'' என்று அவன் மனதிற் புலப்பட்டது.

மேலும் அவன் அன்று அரண்மனையில் சந்தித்த அம்மாதின் நடக்கையில் அவள்மேல் வெறுப்புதோன்றினும், அவளைக் காணவேண்டு மென்றும் அவள் சகவாசத்தி

லிருக்கவேண்டுமென்றும் ஒருவிதப் பரிசுத்தமான அன்பு அவன் மனதில் உண்டாகி யிருந்தது. அதன் காரணம் அவனுக்குச் சற்றும் விளங்கவில்லை. ஆகவே இராகவன் பிரியப்படி அரண்மனைக்கு அவன் கூடச்செல்ல ஒப்புக் கொண்டான்.

இராகவன், அவனை யழைத்துக்கொண்டு அரண்மனை யைச் சுற்றியிருக்கும் மதிற்சுவரோரமாகவே சென்று கடைசியில் ஒரு தாழ்ந்த வாயிற்படி யருகிற் சென்றதும் தன்னிடமிருந்த கொத்துச் சாவிகளி லொன்றையெடுத்து அங்கிருந்த கதவைத்திறந்து தோட்டத்திற்குள் நுழைந் தான். அந்த வாயிற்படியைக் கண்டதே வில்வநாதன் இந்த வழியாகவே அன்று தன்னை அம்மூதாட்டி அரண் மனைக்குள் அழைத்துச் சென்றன ளென்று தெரிந்து கொண்டான். பின்பு தோட்டத்தின் வழியாய்ச் சென்ற போதும், அதன் பிறகு அரண்மனைக்குள் நுழைந்தபோ தும் அதேவழியாகத்தான் தான் அழைத்துக்கொண்டு போகப்பட்டதென்று தெரிந்து கொண்டான். கடைசி யில் இருவரும் அங்கிருந்த படிகளின் வழியா யேறியபோ தும் வில்வநாதன் அவ்வழியை யறிந்து கொண்டான். கடைசியில் இருவரும் ஒரு அலங்காரம் செய்யப்பட்ட அறைக்குள் நுழைந்தார்கள். அந்த அறையில்தான் அங் தக்கம்பீரமான சீமாட்டியைத் தான் கண்டதென்பதை யறிந்த வில்வநாதன் மிக்க வியப்படைந்தான்.

இப்போது சற்று முன்பு நடந்த சில விஷயங்களை நாம் கவனிக்க வேண்டியதாக விருக்கிறது. வீதியில் இரா கவன் கூறிய ஏற்பாட்டிற்குச் சனங்களில் ஓர் சார்பார் சம்மதிக்காததால் குழப்ப முண்டாய் விட்டது என்பதை யறிந்ததே, அரண்மனையி லிருந்து பார்த்துக்கொண் டிருந் தவர்கள் பெருந்திகி லடைந்துவிட்டார்கள். அச்சமயம்

டாக்டர் தங்கவேலுப்பிள்ளை ஜனக்கூட்டத்தில் சிக்கிக் கொண்டிருந்த வில்வநாதனைப் பார்த்து விட்டார். பிறகு அவனும் பூபாலனும் சந்தித்து இருவரும் ஒருபக்கமாய்ச் சென்றதைக் கண்டதே திடுக்கிட்டு "அட! இவன் பூபாலனை யெத்தனை நாட்களாக அறிவான். மாயசிங்கனை யிவன் அறிவானோ!" என்று மனக்குழப்ப மடைந்தார். அதற்குள் இராகவன் திரும்பி வீதியின் வழியே யோடுவதையும் ஜனங்களில் சிலர் கோபத்தோடு கூச்சலிட்டுக் கொண்டு அவனைத் துரத்திச் செல்வதையும் இராணி முதலியவர்கள் கண்டதும் "ஒகோ! எல்லாம் முடிந்து விட்டது." என்று ஆவிசோர்ந்தார்கள்.

சித்ராங்கி "நாம் எங்காவது ஓடிப்போய் விடலாம்" என்றாள். இராணி "அய்யோ கடவுளே! எங்கேபோவது?" என்று அலறினாள். அரண்மனையி லிருந்த வேலையாட்களெல்லாம் அவரவர்கள் கைக்கு அகப்பட்ட விலையுள்ள பொருள்களை யெடுத்துக் கொண்டு ஓடிவிடத் தொடங்கினார்கள்.

அரசர்களுக்கு எப்போதுமே ஆபத்துக் காலத்தில் உதவிசெய்யும் சினேகர்கள் கிடையாது, ஏனெனில் அரசர்கள் சாதாரண காலத்தில் ஒருவரையும் தங்களோடு சமமாய் வைத்துக் கொள்ளாமல் தங்கள் பதவி யாவரிலும் உயர்பதவியெனக் கருதி ஒருவரையும் நெருங்க விடாது, ஒருவரிடமும் முகங்கொடுத்துச் சரசமாய் நடந்துகொள்ளாமல் சமிக்கைகளாலும், சாடையாகிய கண் பார்வையாலும் சிரக்கம்பம் முதலியவைகளாலுமே பெரும்பாலும் சம்பாஷிப்பது வழக்கம். ஆகையால் அவர்கள் க்ஷேமமாயிருந்த காலத்தில் அவர்களுக்கு ஊழியம் செய்துகொண்டிருந்து கௌரவம் பெற்றும், அவர்களிடம் அபரிமிதச் செலவால் சிந்திப்போவதைச் சேகரித்துக் கொழுமை

யடைந்தவர்களுமே அவர்களுக்கு ஆபத்து வந்தகாலத்தில் முன்னே ஓடிவிடுவார்கள்.

190 — வருடம் துர்க்கியில் அரசாண்டு கொண்டிருந்த சுல்தானைத் துர்க்கிகள் பட்டத்தினின்றும் நீக்கியபோது அச்சங்கதி அவருக்கு அறிவிக்கப்படு முன்பே, அரண்மனையிலிருந்த அவருடைய வைப்புமாதர் பலரும் வேலையாட்கள் முதலியவர்களும் ஒருவர் தப்பாமல் அனைவருமே கைக்கு அகப்பட்ட பொருட்களை யெடுத்துக்கொண்டு பின்பக்க வழியே யோடி விட்டார்கள். அரசரும் அரசர் புத்திரரும் தாங்களே தீபத்தை யேற்றிக்கொள்ள நேர்ந்ததெனின் இன்னும் அதிகம் கூற வேண்டுவ தின்றாம். ஒருவன் எவ்வளவு உயர்ந்த அந்தஸ்தி லிருக்கிறானோ அவ்வளவுக் கவ்வளவு கெட்டகாலத்தில் அவனுக்கு நேரும் துன்பங்களும் அதிகமாகவே யிருக்கும். இவ்வுலகில் நமக்கு இருப்பதேபோதும் என்ற திருப்தியுடைய ஏழையே உண்மையான சுகத்தை யனுபவிப்பவன்.

வில்வநாதன் ஊதிய சத்தத்தைக் கேட்டதே அரண்மனையி லுள்ளோர்கள், இது கலகம் நடப்பதற்காகக் கலகக்காரர் செய்யும் சமிக்கை யென்று கருதிப் பெருங்குழப்பமடைந்தார்கள். சித்ராங்கி ஓடிவிடலாம் என்றதே பத்மநாயகி "எங்கே போவது, முதலில் யார் உள்ளே வருகிறார்களோ அவர்களிடம் அடைக்கலம் புகுவதே நலம்" என்றாள். புண்ணிய கோடிப் பிரபு "நிலவறைக்குச் செல்லுங்கள். நிலவறைக்குச் செல்லுங்கள். தற்சமயம் அங்கிருந்தால் போர் வீரருக்குத் தலைவனாய் நான் இருந்து என்னால் கூடியவரைப் பாதுகாக்கிறேன்" என்றான்.

இராணி "வேண்டாம், நாம் இங்கேயே இருக்க வேண்டும். ஜனங்கள் அத்துமீறி அரண்மனைக்குள் வரு

வார்களாயின் நானே சென்று அவர்கள் முன்னின்று அவர்கள் கோபத்தையாவது தணியச் செய்கிறேன், அல்லது அவர்கள் கோபத்திற்குப் பலியாகிறேன்'' என்றாள். அப்போது புண்ணிய கோடிப்பிரபு "நான் சவமாகும் வரையில் இந்த வாளினால் தங்களைப் பாதுகாப்பேன்" என்றான். இராணி புன்னகையோடு அவனுக்கு வந்தனமளித்தாள்.

முன்பு இராகவன் ஜனங்களின் கோபத்தை யடக்குவதாய்க் கூறி வெளிச்சென்றபோது டாக்டர் காவல் வீரரை யழைக்கும்படி கட்டளையிட்டார். ஆனால் இராணி யெப்படியும் பட்டத்தினின்று நீக்கப்படுவாள் என்று நம்பிய போர்வீரரில் பெரும்பாலோர் அங்கில்லாது போய் விட்டதால் மிகச் சிலரே பாதுகாப்பிற்கு வந்தார்கள். அங்கு வந்திருந்த ஜனக்கூட்டத்தின்முன் அவர்களையனுப்பினால் ஒரு நிமிடியில் நசுக்கப்படுவார்களே யன்றி வேறில்லையாதலால் அவர்களால் ஒரு பயனும் எதிர்பார்ப்பதற்கில்லை.

இராணியின் வந்தனத்தைப் பெற்றுக்கொண்டு புண்ணியகோடிப் பிரபு சாளரத்தருகில் சென்று நின்று வீதியில் நடக்கும் சம்பவங்களைப் பார்த்துக்கொண்டிருந்தான். சற்று நேரத்திற்குள் அவன் "ஓ! உதவி வந்துவிட்டது! உதவி!'' என்று கூறினான். உடனே இராணி முதலியமற்ற பேரும் துரிதமாய்ச் சாளரத்தருகில் சென்று நோக்கினார்கள். அங்கு மாயசிங்கன் குதிரைவீரர்கள் வந்ததும், அரண்மனையைத் தாக்கும் ஜனங்களைத் தடுத்து மாயசிங்கன் கட்டளையைக் கூறி ஜனங்களைக் கலைந்துபோகச் செய்ததையும் கண்டார்கள். உடனே தங்களுடைய ஆபத்து முழுதும் நீங்கிவிட்டதென்று கண்டதே அவர்களுக்

கிருந்த கொடியபயம் நீங்கிக் கொஞ்சம் சந்தோஷம் உதித்தது.

அதன் பிறகு அனைவரும் அவரவர்கள் ஆசனத்தில் அமர்ந்து தத்தம் மனோ நோக்கத்தின்படி எதையோ சிந்தித்துக்கொண் டிருந்தார்கள். இராணி "இராகவப்பிரபு எங்கே?" என்றாள். பத்மநாயகியும் "ஆ! என்மகன் எங்கே?" என்றாள். டாக்டர் தங்கவேலுப்பிள்ளை "அவன் வீதியின்வழியே ஓடியதையும் ஜனங்களில் சிலர் அவனைத் துரத்திக்கொண்டு சென்றதையும் பார்த்தோம். இது வரையில் அவன் எங்காவது ஒரு க்ஷேமமான இடம் போய்ச் சேர்ந்திருப்பான். ஜனக் கூட்டங்களெல்லாம் கலைந்ததே வந்து சேர்வான். அவன் எத்திக்கே சென்றானென்று தெரியாததால் அவனைத் தேடிச்செல்வதில் சற்றும் பயனில்லை" என்றார்.

டாக்டர் மனதில் ஒரு பெருங்கலக்கம் உண்டாயிற்று. அதாவது "வில்வநாதனும் பூபாலனும் சந்தித்தார்களே. பூபாலன் வில்வநாதனை யறிந்திருப்பதாய் நம்மிடம் கூறவில்லையே. ஒரு சமயம் வில்வநாதன் மாயசிங்கனைச் சந்தித்திருப்பானோ? அப்படியாயின் தற்செயலாய்...... வெளியாய்விட்டிருக்குமோ" என்று கலக்கமடைந்தார். வில்வநாதன் சில நாட்களாக இடையில் ஒரு ஊது குழல் கட்டிக்கொண்டிருப்பதை டாக்டர் கண்டிருப்பதால் இப்போது கேட்கப்பட்ட சத்தம் அதனால்தான் நேரிட்டிருக்க வேண்டுமென்று அவர் மனதிற்பட்டது.

டாக்டர் இவ்வாறு சிந்தித்துக்கொண்டே யிருக்கையில் இராகவனும் வில்வநாதனும் கதவைத்திறந்துகொண்டு அறைக்குள் வந்தார்கள். இராணி இராகவனைக்கண்டதும் சந்தோஷத்தோடெழுந்து எதிர்கொண்டு சென்றாள். இதற்குள் பத்மநாயகி தன் மகனை நோக்கியதே சந்தோஷ

மடைந்தாள். ஆனல் மறுவினடி அவன்பின்னல் வந்த வில்வநாதனைக் கண்டதும் பேரிடி விழுந்தவள்போல் பிரமையும் திகிலுமடைந்து கண்கள் விழித்தபடி முகம் வெளுத்து நோக்கினள்.

இதைக்கண்ட டாக்டர் சட்டென்று அவளருகில் சென்று குனிந்து "ஆ! நீயிவனைப் பார்த்திருக்கிறய்" என்றார். பத்மநாயகி மிக்க தடுமாற்றத்தோடு "ஆம். ஆம். ஒருநாள் கண்டிருக்கிறேன். அவனை யனுப்பிவிடும்! அனுப்பிவிடும்!" என்றாள். டாக்டர் கோபத்தோடு "சட் பேசாமலிரு. உன் குழப்பத்தை யடக்கிக்கொள்" என்றார். பத்மநாயகி உடனே சமாளித்துக்கொண்டு மெதுவாய் எழுந்து வில்வநாதனருகிற்சென்று "ஆ. வாலிபனே! நீ என் புத்திரனுடைய நண்பனானல் நான் உனக்கு நல்வரவு கூறுகிறேன்" என்று சாதாரணமாகக் கூறிவிட்டு உடனே தாழ்ந்த குரலாக அவனுக்குமட்டும் கேட்கும்படியாக நீ யோக்கியனயின் தயவுசெய்து முன்பின் என்னைக் காணுததுபோல் நடந்துகொள்வாயென்று நம்புகிறேன்" என்று கூறினள். அதற்கு விடையாக அவன் பார்த்த பார்வையால், அவன் அவ்வாறே நடந்துகொள்வானென்று அம்மாது உணர்ந்துகொண்டாள்.

வில்வநாதன் தான் அன்று கண்டமாது, எவ்வளவோ தான் கேள்விப்பட்டிருக்கும் பத்மநாயகிச் சீமாட்டியேயென்று அப்போதுதான் உணர்ந்தான். ஆயினும் தன் வியப்பு முழுமையும் அடக்கிக்கொண்டான். அவன் அதற்குள் டாக்டரைப் பார்த்துவிட்டுப் புன்னகையோடு அவரருகிற் சென்றான்.

டாக்டர் சந்தோஷமான முகத்தோடு "ஏது; எப்போதும் ஏகாந்தவாசத்தையே விரும்பி யிருக்கும் நீயிங்கு

வந்தது மிக்க ஆச்சரியமாக விருக்கிறது. என்ன சம்பவமோ?'' என்றார்.

வில்வநாதன் விடையளிப்பதற்குள் இராகவன் இராணியை நோக்கி "மகாராணி! நான் இந்த வாலிப நண்பனைத் தங்களுக் கறிமுகமாக்குவதில் ஆலசியம் செய்துவிட்டேன். இந்த நண்பனே என் பிராணனைக் காப்பாற்றினவன். இவனே அரண்மனைக்கு அழிவு நேரிடாமலும் தங்களுக்கு ஆபத்து வராமலும் செய்த உத்தமதீரன். இவனுக்கே தங்கள் வந்தனம் உரியது'' என்றான்.

இராணி "ஆ! வாலிபரே! நமது மனப்பூர்வமான வந்தனத்தை யுமக்களிக்கிறோம். நீர் இத்தகைய அரிய உதவி செய்யக்கூடிய நிலைமையிலிருந்தது எவ்வண்ணமோ?' என்றாள். இராகவன் "இதோ இவன் இடையிலணிந்து கொண்டிருக்கும் இவ்வூதுகுழலே யதற்குக்காரணம்'' என்றான். இராணி "ஆ! அத்தகைய சாமார்த்தியமுடைய அவ்வூதுகுழல் மிக்க அற்புத மகிமையுடையதாக விருக்க வேண்டும்'' என்றாள். பிறகு தனது அரண்மனையும் தானும் மற்றவர்களும் காப்பாற்றப்பட்டது மாயசிங்கனுடைய ஆட்களால் என்று கூறப்பட்டதே, "அதன் விபரமென்ன? நீ கள்ளர்கூட்டத்தைச் சேர்ந்தவனாக விருக்கமாட்டா யென்று நம்புகிறேன்'' என்றாள்.

வில்வநாதன்:—"மகாராணி! இக்குழலை யூதியதால்தான் இராகவப்பிரபு காப்பாற்றப்பட்டதும் கலகம் அடக்கப்பட்டதும். இதை யூதியதே வந்து மேல்படி உதவியைச் செய்தவர்கள் மாயசிங்கனுடைய ஆட்களே. ஆனால் தாங்கள் கருதியதுபோல் நான் கள்ளக்கூட்டத்தைச் சேர்ந்தவனல்ல. நான் செய்த இந்த அபூர்வ உதவிக்காக நான் எதிர்பார்க்கும் பரிசனைத்தும்கூடி

இவ்வூதுகுழலைப்பற்றிய இரகசியத்தை வெளியிடும்படி கேட்காதிருக்கக் கோருவதேயாகும்'' என்றான்.

இராணி — "வாலிபரே! நீர் செய்த உதவி மிக்க அருமையானது. அதற்கு என்ன பிரதிபலனளிப்பதென்பதே யெனக்கு விளங்கவில்லை. அப்படியிருக்க உன் இரகசியத்தை வெளியிடும்படி நான் உன்னைக் கேட்பது செய்நன்றி மறப்பதாகும். ஆனால் நமக்கும் நமது இராச்சியத்திற்கும் இத்தகைய பேருதவிசெய்த உமது நாமதேயம் என்னவென்பதைமட்டும் கூற வேண்டும்'' என்றாள்.

உடனே டாக்டர் "மகாராணி! நான் பன்முறை தங்களிடம் கூறியிருக்கும் வில்வநாதன் என்பவனே இவன்'' என்றார்.

இராணி மிக்க சந்தோஷமடைந்து "ஆகா! தெரிகிறது, தெரிகிறது. தாங்கள் இத்தகைய அழகும் குணமும் வாய்ந்த வாலிபனை வளர்ப்புப் புத்திரனாக அடைந்திருப்பதற்கு நாம் மிக்க சந்தோஷமடைகிறோம். ஆபினும் மாயசிங்கன் நமக்கு இத்தகைய உபகாரம் செய்தது பெரிய வியப்பே'' என்றாள். டாக்டர் "ஆ! மகாராணி! இக்கள்ளர்களுடைய நடக்கையை நோக்க இம்மாயசிங்கனுடைய கருத்து இன்னதென்று எனக்குச் சற்றும் விளங்கவில்லை'' என்றார்.

இராணி:—"ஆம். மாயசிங்கன் மிக்க ஆச்சரியமும் அபூர்வமுமான மனிதனாகவே தோன்றுகிறான். ஒரு இராணிக்கே கெடுதி செய்யத் தீர்மானித்துக் கோபாவேசங்கொண்டிருக்கும் இந்நகரஜனங்களை ஒருவார்த்தையால் அடக்கிவிட்ட இம்மாயசிங்கன் மிக்க அபூர்வமானவனாகவே யிருக்கவேண்டும். இராணி யென்கிற பதவிக்கு அது அகௌரவமான செய்கையா யிரா

விட்டால் அக்கள்ளத்தலைவனை நேரிற்காண நான் மிக்க பிரியப்படுகிறேன்'' என்றாள்.

இராணி இம்மொழிகளைக் கூறிய மறுகிமிடம் அந்த அறையின் கதவு திறக்கப்பட்டதும், பூரண ஆயுதபாணி யாகிய மாயசிங்கன் கம்பீரமான முகத்தோடு வந்து இராணியின் முன் நின்றான்.

அவனுடைய முகம் மிக்க அழகும் கம்பீரமுமுடை யதே யெனினும் அச்சமயம் கடுகடுப்பாகவும் மிக்க கோபாவேசத்தைக் கஷ்டத்தோடு அடக்கிக்கொண்டிருக் கும் முகம்போலவும் தோன்றியது. ஆனால் அது பயமற் றதும் தன் எதிரிலுள்ள அனைவரையும் அலட்சியமாய்க் கருதுவது போன்றதுமாகிய குறிகளையுடையதா யிருந் தது. அறைக்குள் வந்து சுத்தவீரத்தன்மையோடு நிமிர் ந்து நிற்கும் அவனுருவத்தைக் கண்டதே யாவரும் திடுக் கிட்டுத் திகில்கொண்டு நடுக்கமுற்றார்கள். சித்ராங்கி அலறிக்கொண்டோடிப் புண்ணியகோடிப் பிரபுவைப் பற் றிக்கொண்டாள். வில்வநாதன், இராகவன் இருவரும் மிக்க வியப்பும் பிரமையுமடைந்தார்கள். டாக்டர் மேலுக்குத் தைரியத்தோடிருப்பவர் போற் றோன்றினும் அவர் உள்ளத்தில் திகிலே யுண்டாயிற்று.

இராணி யவனுருவத்தைக் கண்டதும் குகையில் தோன்றி "இராகவா! நீ காப்பாற்றப்பட்டாய்'' என்று கூறிய உருவத்தை நினைத்துக்கொண்டாள். உடனே அக் காட்சி கனவல்ல, உண்மையேயென்று அவள் மனதிற்குப் பட்டது.

முதல் பாகம் முற்றிற்று.

'ஆனந்தபோதினி' அச்சுக்கூடத்தில் பதிக்கப்பட்டது, சென்னை.

பவளத்தீவு

அல்லது

குடும்பசாபம்

(இரண்டாம் பாகம்.)

இஃது
ஸ்ரீமான் ஆரணி-குப்புசாமி முதலியார்
அவர்களால் எழுதப்பட்டு

சென்னை
“ஆனந்தபோதினி” பத்திராதிபர்
நா. முனிசாமி முதலியாரவர்களால்
வெளியிடப்பெற்றது.

1923

காபிரைட்-ரிஜிஸ்டர்ட்] [விலை ரூ. 1-6-0.

பவளத்தீவு

அல்லது

குடும்பசாபம்

(இரண்டாம் பாகம்.)

30-வது அத்தியாயம்.

மாயசிங்கனைக் கண்ட பத்மநாயகி முதலியவர்களின் கலக்கம்—பிறகு உண்டாகும் குழப்பம்—மாயசிங்கன் தைரியம்—வில்வநாதன் பெருந்தன்மை—இராகவன் மாயசிங்கனை யுத்தத்திற் கழைத்தல்—வில்வநாதனும் மாயசிங்கனும் சம்பாஷித்தல்—இரகசிய வழி—வில்வநாதன் வியப்பு.

மாயசிங்கன் அறைக்குள் வந்து நின்றதும் அவன் உருவத்தைக் கண்டதே பத்மநாயகி அப்படியே ஆசனத்தில் சாய்ந்து விட்டாள். அவள் திறந்த வாயையும் திறந்த கண்களையும் மூடமுடியாமல் அசைவற்று மரம்போலாய் விட்டாள். அவளுக்குண்டான பெருந்திகிலால் அவள் தேகத்தில் இரத்த ஓட்டம்நின்று விட்டதால் அவள் ஸ்தம்பித்து விட்டாள். ஆனல் இரண்டொரு நிமிடங்களில் மாயசிங்கன்தன் விசாலமான தீக்ஷண்யம் பொருந்திய கண்களால் அவள் முகத்தை யுற்று நோக்கியதும் குபீலென்று அவள் தேகத்தில் இரத்

தம் ஒட்டமெடுத்து இருதயத்திற்கும் மூளைக்கும் பாய்ந்த தால் அவள் துள்ளியெழுந்து நின்றதும் கோவென் றல றித் தன் கரங்களால் முகத்தை மூடிக்கொண்டு பக்கத்தி லிருந்த சுவரின்மேல் சாய்ந்து விழுந்துவிடப் போனாள். இதைக்கண்ட டாக்டருக்கு மட்டும் காரணம் தெரியுமாத லால் அவர் சட்டென்று வந்து அவள் கரத்தைப் பற்றிப் பக்குவமாய் அவளை அழைத்துக் கொண்டு அடுத்த அறைக்குச் சென்று அதன் கதவைமூடி யுட்பக்கம் தாளி ட்டுக் கொண்டார்.

கடுகடுத்த கோபமும் கம்பீரமும் சற்றும் அச்சமற்ற தன்மையுமுடைய தோற்றத்தோடு அங்குநின்ற மாயசிங் கன் அவர்க ளிருவரும் அறையைவிட்டுச் சென்றதைக் கண்டதும் ஒருவிதக் குறுநகை புரிந்தான். அங்கு ஒரு புறம் உட்கார்ந்திருந்த இராஜசபைக் காரியதரிசி கைகால் உதறலெடுத்து ஆசனத்திலேயே சாய்ந்து விட்டான். சித் ராங்கி பயத்தோடு தன் காதலனாகிய புண்ணியகோடிப் பிரபுவின் புயத்தைக் கெட்டியாய்ப் பற்றிக் கொண்டாள். அப்பிரபு தன் வாளையுருவிக் கரத்தில் பிடித்துக் கொண்டு இராணிக்கும் சித்ராங்கிக்கும் இடையில் நின்றான்.

வில்வநாதன் திடீலென்று மாயசிங்கனைக் கண்ட ஆச் சரியத்தால் அடைந்த பிரமையைச் சமாளித்துக் கொண் டதும் மாயசிங்கனை நோக்கி "உம்முடைய தைரியசாலிக ளான வீரர்கள் என் கோரிக்கைப்படி உதவி செய்ததற் காக உமக்கு மிக்க வந்தன மளிக்கிறேன்" என்று கூறிக் கொண்டே அவனருகிற் சென்றான்.

மாயசிங்கன் அவன் கரங்களை யன்போடு பற்றிக் கொண்டு, "மிக்க பெருந்தன்மையுடைய வாலிபனே! நீ கோரும் ஜீவகாருண்யமும் தயவுமாகிய உதவியைச் செய்ய அவர்கள் எப்போதும் அடிமைகளாக ஆயத்தமா

யிருப்பார்கள். நீயவர்கள் உதவியைக் கோரியது மிக்க நலமாயிற்று. என் ஆட்கள் இராகவப் பிரபுவைக் காப்பாற்ற நேர்ந்ததற்காக நான் சந்தோஷ மடைகிறேன். அவர் இப்போது ஒன்றின்மே லொன்றுய் நேரிடும் சம்பவங்களை யெச்சரிக்கைகளாகக் கொண்டு இனி நன்னெறியிற் றிரும்புவாரென நம்புகிறேன்.'' என்றான்.

இராகவன் மாயசிங்கனைநோக்கி, "கள்ளர் தலைவனே! உனது ஆட்கள் சமயத்தில் எனக்கும் நமது கனம்பொருந்திய அரசிக்கும் செய்த உதவிக்காக நானும் உனக்கு வந்தனம் புரியவேண்டும். ஆனால் நீ யினி யுன் புத்திமதிகளையும் எச்சரிக்கைகளையும் எனக்குக் கூறத் தொந்திரையெடுத்துக் கொள்ள வேண்டா மென்று கண்டிப்பாய்க் கூறுகிறேன். என்னதான் சாமார்த்தியமாய்க் காட்டப்பட்டதாயினும் அத்தகைய ஜாலங்களுக்கெல்லாம் நான் மயங்கிவிடுகிறவனல்ல,'' என்றான்.

இம்மொழிகளைக் கேட்டதே இராணி "அன்றிரவு அக்குகையில் நாம் கண்டவனைத்தும் உண்மைக் காட்சிகளேயன்றி பொய்த்தோற்ற மல்ல, கனவுமல்ல'' என்று அறிந்து கொண்டு, நீ யென்னை யேமாற்றின யல்லவா என்ற குறிப்போடு, இராகவனை உற்று நோக்கினாள். இராகவன் அவளருகில் குனிந்து "நீ யென்னை மன்னிக்க வேண்டும், ஏனெனில் நான் உன் மனதிற்குக் கலக்கமுண்டாக்கலாகா தென்று அது கனவென்று நீ கருதியதையே யுண்மையென்று கூறினேனே யன்றி வேறில்லை'' என்றான். இராணி "உன்னை மன்னித்து விட்டே'' னென்று உடனே கூறிவிட்டாள். அவ்வாறு கூறியதும் "மாயசிங்கன் தன் அரசியின் முன் வந்தது கீழ்ப்படிவதற்காகத் தானே?'' என்றாள். புண்ணியகோடிப் பிரபு "அப்படிக் கின்றேல் அது உடனே தண்டிக்கத்தக்க துஷ்டச்செய

லாகும்" என்று தன் வாளை யுருவிக்கொண்டு தன்னைப் பற்றிக்கொண்டிருந்த சித்ராங்கியை யப்புறம் விலக்கிவிட்டுப் பாய்ந்து வந்து மாயசிங்கன் அருகில் நின்றான்.

மாயசிங்கன் தன் வாளைக்கூட உறையினின்று வெளியி லெடுக்காமல் புண்ணியகோடிப் பிரபுவை ஒரு துரும்பினும் மிக்க அலட்சியமாகக் கருதும் பார்வையோடு நோக்கி "அடமுட்டாள் பயலே! ஏன் வீணாக எனக்குக் கோபமூட்டுகிறாய்!" என்றான். அப்பிரபு மிக்க கோபமடைந்து மாயசிங்கன் மேல் பாயப்போனான். அதையறிந்த இராணி "பிரபுவே! நீ சண்டைதொடங்கா திருக்கும்படி கட்டளை யிடுகிறேன்" என்றாள். புண்ணிய கோடிப் பிரபு உடனே தன் கத்தியை யுறையிற் போட்டுக்கொண்டு எட்டப்போய் விட்டான்.

மாயசிங்கன் இராணியைநோக்கி "மகாராணி! நான் இங்கு ஏன் வந்தேனென்று கேட்டீர்க ளல்லவா? தாங்கள் மாயசிங்கனை நேரிற்காண விரும்புகிறேன் என்று கூறியதால் அந்தவிருப்பத்தைத் திருப்திசெய்யவே நான் இதோ உம்மெதிரில் வந்து நிற்கிறேன்" என்றான்.

இராணி:—"நீ எனக்குக் கீழ்ப்படிந்து நடக்கும் கருத்தோடு வந்தாயா அல்லது பகிரங்க விரோதியாக வந்தாயா?" என்று கேட்டாள்.

மாயசிங்கன்:—"மகாராணி! உண்மையைக் கூறுகிறேன் கேளும். தன் குடிகளுக்குத் தீயநடக்கைகளின் வழியைக் காட்டும் ஒரு இராணிக்குப் பணிந்திருக்க நான் விரும்பவில்லை" என்றான்.

அதைக் கேட்டவுடனே இராகவன் மிக்க கோபமடைந்து "சட் உன்வாயை மூடு" என்று தன் வாளையுருவிக்கொண்டு மாயசிங்கனை நோக்கி முன்சென்றான். ஆனால் "இராணி நில், முன்பு நான் புண்ணியகோடிப் பிரபுவுக்கு

இட்ட கட்டளையே உனக்கும் இட்டதாகக் கருதவேண்டும்" என்றதே அவன் பின்னுக்குச் சென்றான்.

மாயசிங்கன் அச்சம்பவத்தைச் சற்றும் இலட்சியம் செய்யாது, இராணியை நோக்கி "மகாராணி! என்னுடையவும் என் கீழுள்ள ஆயிரக்கணக்கான பேர்களுடையவும் நம்பிக்கையையும் ஊழியத்தையும் தாங்கள் பெறலாகும்" என்றதே, இராணி "என்ன உன்கருத்து?" என்றாள்.

மாயசிங்கன் "மகாராணி! தெளிவாய் விளங்கும்படிக் கூறி விடுகிறேன். சற்று பொறுமையாய்க் கேளும். பிரசித்திபெற்ற இந்நாட்டிற்கு அரசியாயிருக்கும் புண்ணியம் உமக்கிருந்தது. கோடிக் கணக்கான ஜனங்களின் சுகக்ஷேமங்கள் உமது பாதுகாப்பில் விடப்பட் டிருக்கின்றன. தாங்கள் சிம்மாதனமேறி நாற்பதே நாட்களாயின. இச்சொற்ப காலத்திற்குள் மிக்க தீங்குகள் நேர்ந்துவிட்டன. தாங்கள் இளவரசியா யிருக்கையிலேயே தங்கள் பெயரைப்பற்றி யெங்கும் பெரும் பிரஸ்தாபங்க ளுண்டாயிருந்தன. ஆயினும் தங்களுடைய இயற்கையான சுறுசுறுப்புள்ள நடக்கைகளையும் பெருந்தன்மையையு முணர்ந்தோர் தாங்கள் பட்டத்திற்கு வந்து விட்டால் பிறகு சரியான நெறியில் திரும்பி விடுவீர்களென்று நம்பியிருந்தார்கள். தாங்கள் அப்படியே மட்டும் நடந்து கொண்டிருந்தால் ஆயிரக்கணக்கான பரிசுத்த உள்ள முடைய பலம் பொருந்திய நண்பர்கள் தங்கள் சிம்மாதனத்தைச் சூழ்ந்திருப்பார்கள். ஆனால் தாங்கள் அவர்கள் தங்கள் நம்பிக்கையில் அடியோ டேமாந்துபோகும்படி நடந்து கொண்டீர்கள். யாருடைய பெயர்களைக் கூறினால் யாவரும் மிக்க வெறுப்போடும் அகௌரவத் தோடும், இகழ்ச்சியாய்ப் பேசுவார்களோ அத்தகைய சிநேகர்களே தங்களைச் சூழ்ந்திருக்கிறார்கள்..." என்று அஞ்சாது கூறும்போது

இராணி மிக்ககோபமடைந்து எழுந்து இடியேறு போல் "போதும் போதும். நிறுத்து. நீ யென்னைப்பற்றி அதிகப் பிரசங்கம் செய்ததை நான் பொறுத்துக் கொள்வேன். என் அரியநண்பரை யிப்படித் தூஷித்தவரையில் ..." என்று கூறியதும் இராகவன் "இத்துஷ்டனைக் கொல்ல வேண்டியதே" என்று கூறி வாளையோங்கிக் கொண்டு பாய்ந்தான். அதே வினாடி புண்ணியகோடிப் பிரபுவும் "இவன் மடியவேண்டியதே" என்று தானும் வாளையுருவிக் கொண்டு பாய்ந்தான். ஆகவே இருவரும் ஏககாலத்தில் மாயசிங்கன்மேல் பாய்ந்தார்கள்.

மாயசிங்கன் இவர்களையொரு இலட்சியமாய்க் கருதாமல் வெறுப்பான பார்வையாகவே நோக்கினான். ஆனால் இவர்களுடைய வாள்கள் கீழிறங்குவதற்குள், இமைகொட்டு முன் மாயசிங்கன் உடைவாள் மின்னல் போல் அவன் கரத்தில் ஜொலித்ததும் இவர்கள் இருவர் வாள்களும் தடுக்கப்பட்டன.

மறுவினாடி வில்வநாதன் பாய்ந்து வந்து மாயசிங்கன் பக்கலில் நின்றுகொண்டு தன் குத்தீட்டியைக் கரத்தில் பிடித்து "அடகோழைகளே! ஒருவன்மேல் இருவர்கை போடுவது ஒரு வீரமா? நீதியா? அப்படி யொருபோதும் உதவாது" என்று இராகவனைத் தன் பாகமாகக் கொண்டு அவனைத் தாக்கினான். மாயசிங்கனோடு புண்ணியகோடிப்பிரபு யுத்தம் தொடங்கினான். இராணி மாயசிங்கன் எப்படியும் சிறையாக்கப் படுவானென்று நம்பிக் கொண்டு மற்றபேரிருக்கும் மூலைக்குச் சென்றாள்.

இவர்கள் சண்டை இரண்டொரு நிமிடங்களே நடந்தது. ஏனெனில் அதற்குள் மாயசிங்கன் புண்ணியகோடிப் பிரபுவின் வாளைத்தட்டிப் பறித்துக்கொண்டு அவனைக் கீழே வீழ்த்திவிட்டான். அதேவினாடி வில்வநாதனு

டைய சிறிய ஈட்டி இராகவன் வாளால் தட்டப்பட்டு வாலிபன் இடறிக் கீழே வீழ்ந்து விட்டான்.

மாயசிங்கன் இராகவனைநோக்கி "அடே! பத்திரம்! அவ்வாலிபனைப் பேசாமல் விட்டுவிடு. என் ஆளை நானும் விட்டுவிடுகிறேன்" என்று கூறிப் புண்ணியகோடிப் பிரபுவைக் கொல்லாமல் விட்டான். இராகவன் வில்வநாதனை நோக்கி "நீ முன்பு என் உயிரைக் காப்பாற்றியதற்கும், இப்போது நான் உன்னைக் கொல்லாமல் விடுவதற்கும் சரியாய்ப்போய்விட்டது. இனியொருவருக்கொருவர் நன்றி நினைக்கவேண்டிய கடமையில்லை" என்றான்.

வில்வநாதன் எழுந்து நின்று "ஆ! என்கையில் சிறிய ஈட்டியும் உன்னிடம் நீண்டவாளுமிருந்தால் நீ யென்னைச் செயித்துவிட்டதாய்ப் பெருமைபாராட்டிக்கொள்ள நியாயமில்லை. இருவரிடமும் சம ஆயுதமிருந்திருந்தால் நீ சுலபமாய் என்னைச் செயித்து விட்டிருக்கலாகும் என்று கருதவேண்டாம். ஆகட்டும் இன்னொரு சமயம் வாய்க்கும்போது இந்த என் கரமே நீ தரைமண்ணை வாயாற் கௌவும்படி யுன்னை வீழ்த்திவிடும் என்பதை யறிவிக்கிறேன்" என்றான்.

இராகவன் "சே நீயா?" என்றான்.

மாயசிங்கன் "ஓ இராகவா! இவ்வாலிபனை யவ்வளவு அலட்சியமாய் எண்ணிவிடவேண்டாம். அவனைப்போல் பரிசுத்த உள்ளமும் உத்தம நடக்கையும் பெருந்தன்மையுமுடையோர் இந்த அரண்மனையில் ஒருவர்கூட இல்லை என்று எண்ணிக்கொள்" என்று கூறி அவனையும் புண்ணியகோடிப் பிரபுவையும் நோக்கி "மூடர்களே! நீங்கள் என்னைப்பிடித்துக்கொண்டால் எத்தனை நிமிடங்கள் என்னை இங்கு வைத்துக்கொண்டிருக்க உங்களால் முடியும் என்று கருதுகிறீர்கள்? மறுநிமிடம் என்ன நடக்குமென்பதை

யறியீர்கள்'' என்று கூறிவிட்டு இராணியின் முகத்தை யுற்று நோக்கி,

"மகாராணி! நான் உனக்குச் சில நியாயங்களைக் கூறி யிருப்பேன். ஏன்! உன் நண்பனுகவே மாறி யுனக்கு விசேஷ எச்சரிக்கை செய்திருப்பேன்......'' என்றதே, இராணி "நீயோ? எனக்கு நண்பனுகவா?'' என்ருள்.

மாயசிங்கன் "ஆம், தடையின்றி உன் நண்பனுக. ஆனல் நீ மறுத்துவிட்டாய்; என்னை யலட்சியம் செய்து விட்டாய். சற்று முன்பு என்னுல் காப்பாற்றப்பட்டிருந் தும், நடந்த விஷயங்களைக் கண்ணுரக்கண்டிருந்தும் என் னைப்பற்றி எள்ளளவுகூட நீங்கள் உணர்ந்துகொள்ளவில்லை யென்று நன்ருய்த் தெரிகிறது. மாயசிங்கனுடைய விஷ யம் எப்படிப்பட்டதென்பதை நீங்களறியீர்கள். இன்று நீ என்னைக் காணவேண்டுமென்று விரும்பிய நிமிடமே நான் உன்முன் தோன்றினேன். ஆனல் நாம் சந்தித்ததி னின்றும் ஒரு பயனுமுண்டாகவில்லை. இப்போது நான் கூறுவதை நன்ருய் மனத்தில் வைத்துக்கொள். இன் ெனுரு முறை சீக்கிரத்திலேயே உனக்கு ஆபத்து நேரிடும். அப்போது 'அய்யோ கடவுளே! எனக்கு யாரேனும் உதவி செய்யலாகாதா'வென்று பரிதவிப்பாய். அப்போது நான் வந்து உதவி செய்யாமற்போவே னென்றஞ்சவேண் டாம். உனக்குத்தெரியாதிருந்தாலும் உன்னை யறியாமலே நீ சற்றும் கருதாத வேளைகளில் அடிக்கடி நான் உன் அரு கிலேயே யிருப்பேன் என்று கருதிக்கொள். மறுமுறை யுனக்கு ஆபத்து நேரிடும்போது நீ மிக்க பயங்கரமான இக்கட்டில் சிக்கிக்கொண்டிருப்பாய். அப்போதும் உன் பிரார்த்தனைக்கு இணங்கி உனக்கு உதவி செய்வேன். அந்த ஆபத்தில் நீ 'அய்யோ! இப்போது என்னைக் காப் பாற்ற மாயசிங்கன் அருகிலில்லையே!' என்று அலறுவாய்;

அந்த நிமிடமே நான் அங்குதோன்றி உன்னைக் காப்பாற்றுவேன் என்பதை நம்பு" என்று கூறினன்.

இராணியும் மற்றவர்களும் அவன் பேசிய கம்பீர வார்த்தைகளைக்கேட்டும், அவன் முகத்தில் அச்சமயம் இருந்த ஒருவிதப்பயங்கர சொரூபத்தினல் வாய்திறக்க முடியாது நின்றார்கள்.

மாயசிங்கன் வில்வநாதன் கரத்தை மிக்க அன்போடு பற்றிக்கொண்டு "ஓ உத்தமகுணமுடைய வாலிபனே! நீயவ்வளவு துரிதமாகவும் நீதியாகவும் எனக்கு உதவிசெய்ய வந்ததற்காக நான் மிக்க அன்பார்ந்த வந்தன மளிக்கிறேன். வா இதைவிட்டுச் செல்வோம். இந்த இடத்திலடிக்கும் காற்றுக்கூட உன் பரிசுத்த உள்ளத்திற்குக் கொடிய விடம்போன்ற தாகும்" என்று கூறி அவனையழைத்துக்கொண்டு அறையைவிட்டு வெளிப்பட்டுக் கீழே நோக்கிச் செல்லும் படிக்கட்டுகளில் இறங்கினன்.

அச்சமயம் இராகவன் "இதோ ஒரு நொடியில் வருகிறேன்" என்று இராணி முதலியவர்களை நோக்கிக்கூறிவிட்டுத் துரிதமாக மாயசிங்கனைப் பின் தொடர்ந்து வந்து அவன் சட்டைக்கையைப் பற்றிக்கொண்டு "இதோ பார்! இராணியின்மேல் குற்றம் சாட்டுகிறார்களே அவர்களோடெல்லாம் நான் நாளைமுதல் மூன்று நாட்களுக்கு யுத்தம் புரிவதாய்ச் சபதம் கூறிக்கொண்டிருக்கும் செய்தி நீ யறிவாய். நீ இப்போது இராணியின் முகத்திற்கு முன்பே அவள்மேற் குற்றஞ்சாட்டினய். ஆதலால் நீ யென்னேடு யுத்தம் செய்யவேண்டும். அப்படி நீ வராவிட்டால் நீ உரோஷமில்லாத கோழையென்றே கருதப்படுவாய்" என்று கூறிவிட்டு, அவன் விடைக்குச் சற்றும் எதிர்பாராமல் உடனே திரும்பிச் சென்றான்.

அச்சமயம் மாயசிங்கன் முகத்தில் உண்டான ஒருவித

விகாரத்தைக்கண்டதே வில்வநாதன் மிக்க வியப்படைந்தான். அதற்குள் மாயசிங்கன் தன் மனக்கலக்கமனைத்தும் அடக்கிக்கொண்டு "மூடப்பயல். சுத்த ஆத்திரக்கார முரட்டுப்பயல். தான் செய்வது இன்னதென்று அவனுக்குத் தெரியவில்லை" என்றான். வில்வநாதன் "அப்படிப்பட்டவனுக்கு நல்ல புத்தி கற்பிக்கவேண்டும்; மறுமுறை நாங்கள் இருவரும் சந்திக்கும்போது இந்த இராகவன் இவ்வளவு சுலபமாய் என்னைச் செயிக்க முடியாதென்பது உண்மை" என்றான்.

அம்மொழிகளைக்கேட்ட மாயசிங்கன் "ஆ! நன்றாய் நினைவிற்கு வந்தது. நீ நல்ல சுத்தவீரன். இன்னமும் நீ உன் போஷகனுகைக் கருதியிருக்கும் டாக்டர் தங்கவேலுப் பிள்ளையின் உண்மைக்குணங்களை நான் உனக்கு அறிவிக்காமலிருப்பது பாதகம். அதோடு வில்வநாதம் நீ எனக்கு ஒருவிதத்தில் ஒரு முக்கியமான உதவி செய்யக்கூடும். நீ என் கூட என் வாசஸ்தலத்திற்கு வரவேண்டும். அங்கே நீ அவசியமறியவேண்டிய சில விவரங்களைக் கூறுவதோடு நீ செய்யவேண்டிய உதவி யின்னதென்பதையும் வெளியிடுகிறேன்" என்றான்.

வில்வநாதன் "ஆ! எனது நண்பரே! நீர் எனக்குச் செய்த பல உதவிகளுக்காக நான் உமக்கு என்னால் கூடிய எதையும் செய்யக் கடமைப் பட்டவனுகை யிருக்கிறேன். உமக்கு அவ்வாறு உதவிசெய்ய எனக்குச் சமயம்வாய்ந்தால் நான் மிக்க சந்தோஷ மடைவேன். நீர் கூறுவது எதாயினும் சரி, நான் செய்வதாக இப்போதே சத்தியம் செய்கிறேன். ஆனால் நான் மிக்க நல்லவரென்றும் பெருந்தன்மை யுடையவரென்றும் நம்பி யிருப்பவர் வேறு விதமானவரென்று நான் நம்பும்படி செய்தல் சாத்தியமானதல்ல." என்றான்.

வில்வநாதனை அவன் சிக்கியிருக்கும் அந்த மாயமயக் கத்தி லிருந்து ஒரு நிமிடத்தில் விடுவித்து விடலாமென்று மாயசிங்கன் அறிவான். இருவரும் நீளமாயிருந்த ஒரு வழியே சென்றபின் அதன் கோடியிலிருந்த மடிப்புக் கத வுகளை மாயசிங்கன் தன்னிடத்தி லிருந்த ஒரு திறவுகோ லால் திறந்தான். அந்த வழி யிவர்களை ஆயுதசாலைக்குள் கொண்டுபோய் விட்டது.

வில்வநாதன் அங்கிருந்த அதிசயமான வஸ்துக்களைக் கண்டு அவற்றை நன்றாய்ப் பார்க்கவேண்டுமென்ற ஆவ லோடு நாற்புறங்களிலும் நோக்கினான். மாயசிங்கன் அதைக் கவனியாததால் அவனை யழைத்துக் கொண்டு துரிதமாய் நடந்து அந்த நீண்ட அறையின் கோடியி லிருந்த கவசவுருவங்க ளிருக்கும் மேடையருகில் சென் றான். அங்குச்சென்றதே மாயசிங்கன் மேடைமேல் இறந்த அரசனுடைய கவசம்நிற்கும் இடத்திற்குப் பக்கத்திலிருக் கும் சுவரைச் சற்றுநேரம் தடவிப் பார்த்தான். வில்வநா தன் அதை வியப்போடு பார்த்துக்கொண் டிருந்தான். இரண்டொரு நிமிடங்களில் அச்சுவரில் ஓர் பாகம் ஒரு பெரியகதவுபோல் திறந்தது. அதைக்கண்ட வில்வநாதன் சொல்லொணு வியப்படைந்தான். அந்தவழி ஒரு சதுர மாகவில்லை. கதவைப்போல் திறந்தது சுவரின் ஒருபாக மேயாதலால் அதன் இசைப் பொருத்தங்கள் ஒரு ஒழுங் கின்றி யிருந்தன. கதவுபோன்ற அப்பாகம் முழுமையும் காரையால் கட்டப்பட்டதே. அது பலமான இரும்புச் சட்டங்கள் கீல்களால் தாங்கப்பட்டுக் கதவுபோல் திறக்க வும் மூடவும் உதவியது. அது மூடப்பட்டபின் யாரேனும் பார்த்தால், சுவரின் அப்பாகத்தில் கதவுபோல் இருக்கிற தென்று ஐயமுண்டாக்க எவ்விதமான சந்தேஹும் வடி வேனும் கொஞ்சங்கூடப் புலப்படாது.

மாயசிங்கன் வில்வநாதன் கரத்தைப்பற்றி யவ்வழியே யழைத்துச் சென்றான். அங்கு ஒரு குகைபோல நீண்ட அறையொன் றிருந்தது. அதன் கோடியில் ஒரு கதவிருந்தது. மாயசிங்கன் சுவரில் இருக்கும் கதவை மூடுமுன் அக்கதவைத் திறந்து விட்டான். அப்படிச் செய்யாமல் அக்குகைக்குள் வந்ததும் சுவரிலுள்ள கதவை மூடிவிட்டால் பூரண இருளாய்விடும். அக்குகையின் கோடியிலுள்ள கதவைத் திறந்தபோது தூரத்தில் சுரங்கத்தின் வாய்போன்ற ஒரு இடத்திலிருந்து கொஞ்சம் வெளிச்சம் புலப்பட்டது.

மாயசிங்கன் வில்வநாதனை யழைத்துக்கொண்டு அவ்வழியைக் கடந்து சென்று அதன் கோடியிலுள்ள ஒருகதவைத் தன்னிட மிருந்த ஒரு சாவியால் திறந்தான். அவ்வழி இருவரையும் அரண்மனையின் தோட்டத்தில் ஜனசஞ்சாரமில்லாத ஒரு இடத்தில் கொண்டுபோய் விட்டது.

அத்தோட்டத்தில், இருபுறங்களிலும் செழிப்பான மரங்களடர்ந்த ஒரு செப்பனிட்ட பாதையின் வழியாக இருவரும் கொஞ்சதூரம் சென்றபோது அங்கு வரிசையாய்க் கட்டிடங்க ளிருந்தன. அவை குதிரைகள்கட்டும் இலாயங்கள். இருவரும் அந்த விடத்தை நெருங்கியபோது அங்கிருந்த ஆட்கள் அனைவரும் மாயசிங்கனைக் கண்டதும் தட்டென் றெழுந்து மிக்க வணக்கத்தோடு மரியாதையுடன் வந்தன மளித்து நின்றார்கள்.

இதைக்கண்ட வில்வநாதன் தான் மாயசிங்கனைப் பற்றி எவ்வளவோ கேள்விப்பட் டிருந்தபோதிலும், அரசருடைய அரண்மனையிலேயே அவனுக்கு இருக்கும் மரியாதையைக் கண்டு சொல்லொணு வியப்பையடைந்தான். மாயசிங்கனுக்குக் கீழ்ப்படிந் திருக்கும் ஆட்களின் தொகையையும், அரண்மனையிலுள்ள இரகசியவழிகளெல்லாம் அவனுக்குத் தெரிந்திருப்பதையும், அவன் சற்றுநேரத்

திற்கு முன்பு இராணியிடம் நிர்த்தாட்சணியமாகச் சற்றும் அச்சமின்றிப் பேசிய மொழிகளையும் சிந்தித்தபோது வில்வநாதனுக் குண்டான வியப்பிற் களவேயில்லை. மாயசிங்கனிடம் அவனுச்கு மிக்க பக்தியும் அதிசயமும் உண்டாய்விட்டன.

இருவரும் அத்தோட்டத்தைக் கடந்து அங்கு மதில் சுவரிலிருந்த ஒரு வழியாய் வெளியிற்சென்று அங்கிருந்த பாதைவழியே சில வீதிகளைக்கடந்து கடைசியில் நெருக்கமான ஒரு வீதியில் பிரவேசித்தார்கள்.

31-வது அத்தியாயம்.

கவசம்செய்யும் இடம்—பூபாலனுடைய தந்தையும் தமையனும்—மிக்க அதிசயமான பிரதிமைகள்—சில சம்பாஷணைகள்—மாயசிங்கன், பூபாலன், வில்வநாதன் மூவரும் கள்ளரின் வாசஸ்தலத்திற்குச் செல்லல்—மாயசிங்கனுக்கும். வில்வநாதனுக்கும் நடக்கும் விசேஷ சம்பாஷணை—குசலாம்பாள் தனக்கு நேர்ந்த ஆபத்தைப்பற்றித் தன் பெற்றோரிடம் வெளியிடல்—வில்வநாதனைப்பற்றி குசலாம்பாளுக்கும் அவள் பெற்றோர்க்கும் சந்தேகம் தோன்றல்.

மாய சிங்கனும் வில்வநாதனும் நெருக்கமான வீதியில் நுழைந்ததும் மாயசிங்கன் "நண்பனே! நமது வாசஸ்தலத்திற்குச் செல்லுமுன் இங்கிருக்கும் ஒரு சிநேகனைப் பார்க்க வேண்டும்" என்றான். இரண்டொரு நிமிடங்களில் இருவரும் அங்கிருந்த ஒரு புராதன வீட்டிற்குள் நுழைந்தார்கள். உள்ளே நுழைந்ததும் வீட்டின் பின்புறத்தில் பலபேர் உலோகத்தைச் சம்மட்டிகளால்

பலமாயடிக்கும் சத்தம் செவி செவிடுபடும்படி கேட்பதை யுணர்ந்த வில்வநாதன் வியப்படைந்து மாயசிங்கனைநோக்கினன். மாயசிங்கன் "நாம் காணவந்த நண்பன் கவசங்கள் செய்பவன்" என்றான்.

மாயசிங்கன் வீட்டின் பின்புறம் கொல்லர்கள் வேலை செய்துகொண் டிருக்கும் இடத்திற்கு வில்வநாதனை யழைத்துக்கொண்டு சென்றான். மாயசிங்கனைக் கண்டதே அத் தொழிற் சாலையின் தலைவனாகிய வயது முதிர்ந்த மனிதன் உடனே எழுந்து நின்று வேலையை நிறுத்தும்படி யாவர்க்கும் சமிக்கை செய்துவிட்டு மாயசிங்கனை நோக்கி "எஜமானே வந்தனம். இன்று என்னால் ஆகவேண்டிய வேலை யேதாவ திருந்தால் செய்யச் சித்தமா யிருக்கிறேன்" என்றான்.

மாயசிங்கன் "நண்பனே! இதோ என்கூடவந்திருக்கும் என்தோழனாகிய வாலிபனுக்கு இசைந்த நேர்த்தியான ஒரு கவசம் மிகத்துரிதத்தில் வேண்டும். இவன் தேகத்திற்குப் பொருத்த முடையதாகச் செய்துவிடக் கூடியது ஏதேனும் கையிருப்பி லிருக்கிறதோ?" என்றான். அம்மனிதன் "ஆ! மிக்க நேர்த்தியானது ஒன் றிருக்கிறது. அதுபொன் பூசப்பட்டது. முதல் தரமான எஃகினால் செய்யப்பட்டு நேர்த்தியாய்த் துவையலிடப் பட்டது. அணிவதற்கு மிக்க இலேசானது. ஆனால் எப் படிப்பட்ட ஈட்டியாவது வாளாவது அதைத் துளைக்கவும் முடியாது. அது அமரநாதம் இராஜகுமாரருக்காகச் செய் யப்பட்டது. விலைமட்டும் கொஞ்சம் அதிகம்" என்றான்.

மாயசிங்கன் "நீ கூறிய விலையை நமது பூபாலனிடம் நாளைக்குக் கொடுத் தனுப்புகிறேன்" என்றான். கவசம் செய்யும் மாதவன் என்பவன் உடனே அங்கிருந்த உயர மான ஒரு அலமாரியைத் திறந்து அதில் தொங்கவிட்டி

ருந்த கவசத்தை யெடுத்து மாயசிங்கனுக்குக் காட்டி "இது இவ்வாலிபர் தேகத்திற்கே செய்ததுபோல் சரியாய்ப் பொருந்தும்" என்றான். மாயசிங்கன் கவசத்தை நன்றாய்ப் பார்த்து விட்டபின் சீக்கிரம் இதை என்னிடத்திற்கு அனுப்பிவிடு. நாளைக்கு நீ கூறும் தொகையை யனுப்பி விடுகிறேன்" என்று அதன் விலையையறிந்து கொண்டு "உன் புத்திரன் நாதமுனி இருக்கிறானா? அவனுக்குக் கொஞ்சம் பணம்கொடுக்க வேண்டும்" என்றான். மாதவன் "அவன் தன் தொழிற்சாலையில் எப்போதும் போலிருக்கிறான்" என்றான்.

அதன் பிறகு மாயசிங்கனும் வில்வநாதனும் அங்கிருந்து புறப்பட்டு வீட்டின் இன்னொரு பாகத்தி லிருந்த படிகளின் வழியாய் மேல்மாடிக்கு ஏறினார்கள். அங்கிருந்த வாயிற்படியில் பூபாலன் உட்கார்ந் திருந்தான். அவன் மாயசிங்கனைக் கண்டதும் மிக்க வியப்படைந்து எழுந்துநின்று வந்தனமளித்தான். மாயசிங்கன், "பூபாலா! நாங்கள் இப்போதுதான் உன் தந்தையைப் பார்த்து விட்டுவந்தோம்" என்றான். பூபாலன் "என் தந்தையையா?" என்றான்; உடனே அவன் மனதில் பெருந்திகில் உண்டானதால் அவன் முகம் வெளுத்து விகாரமடைந்தது. ஏனெனில் அவன் நெஞ்சகத்தில் குற்ற மிருந்ததால் வில்வநாதன் கூடவந்திருப்பதை நோக்க "ஒரு சமயம் நாம் டாக்டருக்கு உளவு கூறிய சங்கதி வெளிப்பட்டு விட்டதோ! அதை நம் தந்தையிடம் கூறவே இவர்கள் வந்தார்களோ?" என்று அவன் மனதில் அய்யமுண்டாயிற்று.

மாயசிங்கன் "இவன், தன் தந்தையைக் கண்டவில்வநாதன் அவன் துரைத்தனக் கொலையாளி என்பதையுணர்ந்து நம்மை மிக்க இழிவாய்க் கருதுவான் என்று எண்

ணியே வியாகூலப் படுகிருன்" என்றெண்ணிக் கொண்டு, அவனைநோக்கி "பூபாலா! நமது வாலிபன் அதற்காக உன்னை இழிவாய்க் கருதும் குணமுடையவனல்ல. நீ வீணுக வியாகூலப்படாதே" என்ருன். இச்சம்பவங்க ளைக் கண்ட வில்வநாதன் ஒன்றும் விளங்காமல் வியப் படைந்தான். முன்னமே அவன்மனதில் ஒரு வியப் பிருந்தது. அதாவது மாயசிங்கனும் தானும் மாதவனிட மிருந்து திரும்பியவுடனே வில்வநாதன் மாயசிங்கனை நோக்கி "சவசம் எனக்காகத்தானு? ஏன்?" என்ருன். மாயசிங்கன் இங்கே யதைப்பற்றி யொன்றும் பேச வேண்டாம். நமது இடத்திற்குச் சென்றபின் யாவும் கூறு வேன்"என்ருன். ஆகையால் இப்போது வில்வநாதனுக்கு நடப்பவை யெல்லாம் வியப்பாகவே யிருந்தன.

மாயசிங்கன் பூபாலனை நோக்கி "வாலிபனே! நமது நண்பனுகிய வில்வநாதன் என்னேடு நமது வாசஸ்தலத் திற்கு வருகிருன்; நாம் சீக்கிரம் புறப்படவேண்டும். நாங் கள் சென்று உன் தமையனைப்பார்த்து விட்டு வருவதற்குள் நீ குதிரைகளை ஆயத்தம் செய். நீயும் கூடவே வரவேண் டும்" என்ருன். சிறுவன் அவ்வாறே யொருநொடியில் ஆயத்தமா யிருக்கிறேன் என்று கூறிக்கொண்டே சென் ருன்.

மாயசிங்கன் வில்வநாதனை யழைத்துக் கொண்டு மேலேறி மாடியிலிருக்கும் ஒரு அறையின் கதவைத் திறந்து உட்சென்ருன். அந்த அறையின் வாயிற்படியைத் தாண்டி ஒரு அடியெடுத்து வைத்ததும் வில்வநாதன் பிர மித்துத் தட்டென்று நின்று விட்டான். ஏனெனில் அங்கு மிக்க நாணயமாக உடையணிந்த ஐந்தாறுபேர் மாதர்க ளும் ஆடவர்களுமாக ஒரு கூட்டமாய் நின்றுகொண் டிருப்பதாக அவன் கண்டு பிரமித்து நாணத்தோடு நின்

ருன். அதைக் கண்ட மாயசிங்கன் புன்னகை புரிந்து அவனை யுற்றுநோக்கி "நண்பனே! கலவரப்படாதே. இவ்வுருவங்க ளனைத்தும் மிக்க சாமார்த்தியமாகச் செய்யப்பட்ட மெழுகு உருவங்களே யன்றி வேறில்லை" என்ருன். அச்சமயம் அந்த விசாலமான அறையின் ஒரு கோடியில் உட்கார்ந்திருந்த மெலிந்த தேகியாகிய நாத முனி என்ற வாலிபன் இவர்களைக் கண்டதும் தட்டென்றெழுந்து மாயசிங்கனுக்கு முகமலர்ச்சியோடு வந்தனமளித்தான்.

அவ்வாலிபன் பூபாலன் தனயனே. அவன் முகம் வெளுத்து அவன் தேகத்தில் இரத்தம் குறைந்துதோன்றியது. அவன் காசவியாதியால் பீடிக்கப்பட்டு மிக்க பலஹீனமான நிலைமையி லிருக்கிருன். ஆயினும் புத்தியின் பிரகாசமட்டும் அவன் நேத்திரங்களில் ஜொலித்துக் கொண்டிருந்தது. வில்வநாதன் அங்கிருந்த உருவங்களை நெருங்கியபோது இன்னும் அதிக ஆச்சரிய மடைந்தான். ஏனெனில் அவ்வுருவங்கள் அப்போது உயிரோடிருக்கும் மனிதர்களின் உருவங்களாகவே யிருந்தன.

இராணி, இறந்துபோன அரசன், அமரநாதன், பத்மநாயகி, இராகவன், சித்ராங்கி மாயசிங்கன், டாக்டர் தங்கவேலுப்பிள்ளை, ஆகிய இவர்கள் உருவங்களே அங்கிருப்பவை. அந்த ஆட்களே அங்குவந்து நிற்பதுபோ லிருந்ததால் வில்வநாதன் அவற்றின் வேலைச் சாமார்த்தியத்திற்காக மிக்க வியப்படைந்து மாயசிங்கனை நோக்கி, "நண்பரே! நான் இந்த அதிசயக் காட்சியைக் காணும்படி செய்ததற்காக உமக்கு மிக்க நன்றி பாராட்டுகிறேன். ஆகா! இவற்றைச் செய்த சாமார்த்தியவான் யார்?" என்ருன்.

மாயசிங்கன் உடனே "இதோ" என்று நாதமுனி

யைச் சுட்டிக்காட்டினுன். வில்வநாதன் துரிதமாய் அவன் அருகிற்சென்று "ஆ! நான் உமது உருவங்களைக் கண்டதால் சொல்லொணுத வியப்பையும் ஆனந்தத்தையும் அடைகிறேன்" என்ருன். நாதமுனி, தாங்கள் கூறுவதற்காக மிக்க வந்தனம். ஆனல் உண்மையில் இப்போது தாங்கள் பார்த்தது இவற்றிலுள்ள அற்புதங்களில் மிக்க அற்பமான பாகமாத்திரமேயாகும்" என்ருன்.

மயாசிங்கன் "நண்பனே! இவற்றிலுள்ள அற்புதங்களையெல்லாம் நமது வாலிபநேயன் காண இப்போது அவகாசமில்லை. கூடிய சீக்கிரம் மறுபடிவருவோம். அப்போது நீஅவற்றைச் சாவதானமாய்க் காட்டலாம். இச்சமயம் நாங்கள் ஒரு விஞடிகூட ஆலசியம் செய்யலாகாது. இந்த நண்பனையும் உன்னையும் ஒருவருக்கொருவர் அறிமுகமாக்கி வைப்பதற்காகவே இச்சமயம் இங்கிவரையழைத்து வந்தேன்" என்று கூறிவிட்டு மடியிலிருந்து பணம் நிறைந்த ஒருபையை யெடுத்து அவனிடமளித்து "இது நீ அன்றிரவு எனக்குச்செய்த உதவிக்காக ஓர் அற்பப்பரிசு" என்ருன்.

வில்வநாதன் "ஆ! நான் இவ்வதிசயங்களைக்காணும் நாளை மிக்க ஆவலோடு எதிர்பார்த்துக்கொண் டிருப்பேன்" என்று நாதமுனியை நோக்கிக்கூறினுன். நாதமுனி "நான் உன் வரவைமிக்க ஆவலோடு எதிர்பார்த்திருப்பேன்" என்ருன். மறுகிமிடம் மாயசிங்கனும் வில்வநாதனும் அங்கிருந்து திரும்பிக் கீழிறங்கி வீட்டைவிட்டு வீதிக்குவந்தார்கள். பூபாலன் சேணங்கள் கட்டப்பட்ட மூன்று குதிரைகளோடு அங்கு ஆயத்தமா யிருந்தான். உடனே மூவரும் குதிரைகளின்மே லேறிக்கொண்டு புறப்பட்டார்கள்.

இவர்கள் நகரத்தைக் கடந்து வெளிப்பிரதேசத்தை

யடைந்ததும் பாழடைந்தமடம் இருக்கும் திக்கைநோக்கிப் புரவிகளை வேகமாகச் செலுத்தினர்கள். அம்மடத்தினருகிற் சென்றதே அங்கிருந்த கள்ளக்கூட்டத்தைச் சேர்ந்தவர்களில் சிலர் அங்கிருந்தார்கள். அவர்களிடம் மாயசிங்கன் முதலியவர்கள் தங்கள் குதிரைகளை விட்டுவிட்டு இறங்கிக் குகைக்குள் சென்றார்கள்.

வில்வநாதன் கண்கள் இம்முறை கட்டப்படவில்லை. மாயசிங்கன் அவனை நோக்கி "இந்த இடம் எங்களுக்கு மிக்க அனுகூலமாக விருந்தது. இங்கு ஆவேசங்கள் வருகின்றன வென்று வதந்தியுண்டா யிருப்பது எங்களுக்கு அனுகூலமாக விருந்தது. ஆனல் இப்போது நாங்கள் இருக்குமிடம் பகிரங்கமாக வெளியாய் விட்டதால் இனி இங்குவருகிறவர்கள் எவர்களா யிருந்தாலும் அவர்கள் கண்களைக் கட்டுவதில்லை." என்றான்.

இருவரும் முன் கூறப்பட்ட வழியே யுள்ளே சென்றார்கள். மாயசிங்கனும் வில்வநாதனும் மாயசிங்கனுடைய அறைக்குள் சென்று உட்கார்ந்தார்கள். உடனே மாயசிங்கன் கட்டளைப்படி பூபாலன் சிற்றுண்டிகளும் ஒயினும் கொண்டுவந்து அவர்கள் முன் மேஜைமேல் வட்டித்தான். இருவரும் புசித்தானபின் பூபாலன் சாமான்களை யெடுத்துக்கொண்டு கதவைமூடிக்கொண்டு சென்றான்.

மாயசிங்கனும் வில்வநாதனும் சற்றுநேரம் ஒருவரை யொருவர் பார்த்துக்கொண்டு மௌனமா யிருந்தார்கள். கடைசியில் மாயசிங்கன் வில்வநாதனை நோக்கி "நீ டாக்டர் தங்கவேலுப் பிள்ளையிடம் மிக்க பற்றுடையனு யிருக்கிறயல்லவா?" என்றான்.

வில்வநாதன்:—நான் அப்படி யிருக்க வேண்டியது நியாயந்தானு இல்லையா என்பதை நீயேகூறு. எனக்கு என் தாய்தந்தையரே தெரியாது. எனக்கு நினைவி

ருக்கிறது முதல் பெற்றோருக்குப் பதில் எனக்கு அன்னமூட்டியது, ஆடையுடுத்தியது, எனக்கு முத்த மளித்தது, என்னிடம் பட்சமாய்க் கொஞ்சியது, நான் கேட்டவை யனைத்தும் வாங்கிக் கொடுத்தது. என் தேகசுகத்தையும் சௌகரியங்களையும் கண்ணுங் கருத்துமாய்ப் பாதுகாத்தது யாவும் அவரே. அவர் வீட்டிலுள்ள அறைகளில் என் அறைதான் மிக்க அழகாய் அதிகப்பணம் செலவிட்டு அலங்காரம் செய் யப்பட்டிருப்பது. அவர் எல்லாரிடத்திலும் கடுகடுப் பாகவே யிருந்தாலும் என்னிடம் மட்டும் குளிர்ந்த சந்தோஷ முகத்தோடு அன்பாகவே இருக்கிறார். நான் எப்போதும் சுகமாகவும் சந்தோஷமாகவுமே இருக்கவேண்டுமென்று கவனிப்பதே அவருடைய வேலை. கடைசியில் இவ்வுலகில் அவர் நேசிப்பது என் ஒருவனைமட்டுமே என்று அறிந்து கொண்டேன். கொஞ்சக்காலமாய் நான் மனிதர் சுபாவங்களை யெட்ட விருந்தபடியே கவனித்துக் கொண்டு வருகி றேன். அவருக்குத் தெய்வம் பணமேயென்று தெரி ந்து கொண்டேன். ஆனால் அதை யெனக்காகத் தாராளமாய்ச் செலவு செய்கிறார். அதன்றி அதிகா ரத்தின்மேல் அவருக்குப் பேராசை யிருக்கிறது. நான் இரகசியமாகவே ஏழைகளுக்கும் சக்தியற்றவர் களுக்கும், வியாதி யஸ்தர்களுக்கும் உதவிசெய்வதில் அதிகப்பணம் செலவிடுகிறேன். நான் உன்னைக் கண்ட பிறகு உலக விஷயங்களைக் கவனித்து வருகி றேன். ஊரில் நடக்கிற விஷயங்களையெல்லாம் ஜனங் கள் பேசிக்கொண் டிருக்கும் ஹோட்டல்கள், மடங் கள் முதலிய விடங்களுக்குச்சென்று அங்கு நடக்கும் சம்பாஷணைகளைக் கவனிப்பதால் அனேக விஷயங்

களைத் தெரிந்து கொள்கிறேன். அதனால் டாக்டர் தங்கவேலுப்பிள்ளை சுயநலம் ஒன்றையே எப்போதும் கவனித்து நடப்பவர் என்று தெரிகிறது. எப்படியிருந்தாலும் அவர் எனக்குத் தாயும் தந்தையுமா யிருந்தபடியால் நான் அந்நன்றியை மறக்கலாகாதென்பதே என் தீர்மானம். இப்போது நான் அவர்மேல் அன்புவைக்க வேண்டியது நியாயந்தானா என்பதை நீயே சிந்தித்துப்பார்.'' என்றான்.

அச்சமயம் அறையின் வெளியிலிருக்கும் பூபாலன் தேம்பி யழுவதுபோல் சத்தங்கேட்டது. மாயசிங்கன் உடனே யவனையழைத்துக் கேட்டபோது அவன் தான் அழவில்லை யென்றான். ஆனால் வில்வநாதனுக்கு மட்டும் அவன் தான் மாயசிங்கனுக்குச் செய்த துரோகத்தை நினைத்துக்கொண்டு மனந்தாளாம லழுதான் என்று தெரிந்து கொண்டான்.

அதன்பிறகு மாயசிங்கன் வில்வநாதனை நோக்கி ''நண்பனே! நான் உன்னோடு சம்பாஷிக்கும் ஒவ்வொரு முறையும் உன் அரிய கம்பீரமான குணங்கள் அதிகமாக வெளியாகின்றன. உன்மேல் எனக்கு என்னையறியாமலே ஒருவித வாஞ்சை யுண்டாகிறது. நீ என்புத்திரனாக விருந்தால் இதைவிட அதிக வாஞ்சையுண்டாக வழியில்லை. என் மனதில் ஏதோ ஒன்றிருந்து உன்மேல் எனக்கு மனப்பற்றை யுண்டாக்குகிறது.'' என்றான்.

வில்வநாதன்:-''நீ இவ்வாறு கூறியவரையில் நானும் மனம் விட்டுக் கூறுகிறேன். என்மனதிலும் உன்மேல் ஒருவிதப் பற்றுண்டாகி யிருக்கிறது. டாக்டருக்கு இரண்டாவதாக உன் ஒருவனையே நான் நேசிக்கிறேன். அதற்குக்காரணம் எனக்கே தோன்றவில்லை. நீ என் பிராணனையே காப்பாற்றி யிருக்கின்றாய்; அதுவு

மன்றி உன்னிடம் நான் பல உதவிகளைப் பெற்றிருக்கிறேன். இதுகாறும் நான் தனிமையாகவே இருந்து வந்தேன். ஆகையால் நீ யொருவனே யெனக்கு நண்பனுகவும் என்மேல் அன்புடையவனுகவு மிருக்கிருய். இவை யாவும் நடந்திரா விட்டாலும் நீ யெனக்கு ஒரு உதவிகூடச் செய்திரா விட்டாலும், உன்னைக்காணவும் உன்னேடு சகவாசம் செய்யவும் என்மனதில் அடக்க முடியாத ஒரு ஆவல் இருக்கிறது. அது விர்த்தியாகிக் கொண்டே யிருக்கிறது." என்றுன்.

மாயசிங்கன்:—நண்பனே! நாம் இருவரு மனமொத்த அன்பராக விருக்கிருேம். ஆகையால் நான் ஒன்று கேட்கிறேன், அதற்குமனம் விட்டு விடை கூறவேண்டும். என் சிந்தனையும் செய்கையும் யாவும் உன் நன்மையைச் கோரியவைகளாகவே யிருக்கும். நீ யார் மேலேனும் காதல்கொண் டிருக்கிருயா? காதலின் உணர்ச்சி யுனக்குத் தெரியுமா?" என்றுன்

இம்மொழிகளைக் கேட்டதே வில்வநாதன் முகத்தில் ஒருவித விகாரமும் துயரமும் உண்டாயின. அவன் மனதிற் பலவித உணர்ச்சிகள் ஏககாலத்தில் உதித்தன. அவன் வாய் குழறிக்கொண்டே "காதலா? நானு? நான் யார் மேல் காதல் கொள்ளலாகும். அய்யோ கடவுளே! காதல் கொண்டே னென்று கேட்கிருய்?" என்றுன் மாயசிங்கன் "நண்பனே! என்னிடம் எதைக்கூறவும் நீ அச்சப்படவேண்டாம். அன்று காலை நீ துஷ்டகேதுவினிடம் சிக்கிக்கொண்டிருந்த அந்த அழகிய கன்னிகையைக் காப்பாற்றினுயல்லவா. அக்கன்னிகைமேல் உனக்குக் காதலுதிக்க வில்லையா?" என்று அன்போடு வினவினுன்

இதைக் கேட்டதே வில்வநாதன் முகத்தில் குபீ

லென்று இரத்தம் ஏறியது. அவன் கண்களில் ஒருவிதப் பிரகாசமுண்டாயது. அவன் மாயசிங்கனை யுற்றுநோக்கி "நண்பனே! நீ கூறும் விஷயம் அடிக்கடி எனக்கு நினைவில் வருவது உண்மையே; ஆனால் அவள் யாரென்றும் எங்கிருப்பவளென்றும் நான் கொஞ்சமேனுமறியேன். அவள் நாம தேயமே எனக்குத் தெரியாது. ஆ கடவுனே! காதல் என்ற சொல்லைக் கூட நான் நினைக்கலாகுமோ? ஆண்டவனுடை கோபத்தைச் சுமந்து கொண்டிருக்கும் நான், துயரமாகிய பாறுங்கல்லை இருதயத்தின்மேல் சுமந்துநசுங்கிக்கொண்டிருக்கும் நானா காதலைக் கருதுவது. கடவுளறியக் கூறுகிறேன். ஒருவருக்கேனும் நன்மை தவிர தீமையென்பதைக் கனவிலும் கருதாத நான் பொறுக்க முடியாத கோரமான துக்கத்திற் காளாயிருக்கிறேன். இந்த இளவயதில் நான் யாவற்றையும் வெறுக்கவேண்டிய கடமை யுடையவனாக விருக்கிறேன். அந்தோ! வெளியிடலாகாத பெருந்துன்பம், ஒருவருடைய தேறுதலைப்பெறுவதற்கும் வழியில்லாத மனோவேதனை, காதலா! அந்தோ! அதை நினைப்பதே எனக்குப் பெரும்பாதக மன்றோ சித்திக்கும்." என்று அடக்கமுடியாததுயரத்தோடு தன்னை மறந்து ஆவேசம் வந்தவன்போல் கூறிக்கொண்டே யிருந்தவன் திடீலென்று, சொல்லத்தகாத எதையோ சொல்லி விட்டவன்போல் நடுங்கி மிரண்டு தலை நாணிக் கண்ணீர் விட்டான்.

முதல் முறையாக இப்போதுதான் மாயசிங்கன் வில்வநாதன் மனதில் எதோ ஒரு பெருந்துக்கம் இருக்கிறதென்பதை யறிந்தான். அவனுக்குச் சொல்லொணு வியப்புண்டாய் விட்டது. வில்வநாதனுடைய இத்தகைய மனோவேதனைக்குக் காரணம் இன்னதென்று சற்றும் விளங்காமையினால் அவனுக்கு எவ்வாறு தேறுதல் கூறுவதென்று

மாயசிங்கனுக்குப் புலப்படவில்லை. ஆகையால் அவன் சற்றுநேரம் ஒன்றும் தோன்றுமல் ஆழ்ந்த சிந்தனையி லிருந்தான்.

அதற்குள் வில்வநாதன் தன் மனதைத் தேற்றிக் கொண்டு "நண்பனே! இனி நீ டாக்டர் தங்கவேலுப்பிள்ளை யைப்பற்றியும், என்சம்பந்தமாக ஏதோ சிந்தித்திருப்ப தாய்க் கூறியதைப் பற்றியும் வெளியிடலாமே" என்றுன். மாயசிங்கன் "நண்பனே! இப்போது உன்மனம் மிகக் கலங்கி யிருக்கிறது. ஆகையால் உன்மனதிற்குக் கலக் கத்தை யுண்டாக்கும் எந்த விஷயத்தைப் பற்றியும், இப் போதே பேசலாகாது. ஆகையால் தங்கவேலுப்பிள்ளை யைப்பற்றிய சமாசாரத்தைப் பிறகு கூறுகிறேன். இப் போது உன் சம்பந்தமாக இயம்புவதாய்க் கூறிய சங்கதி யைப்பற்றிப் பேசுவோம்" என்றுன். அவ்வாறே இருவ ரும் சுமார் ஒரு மணிநேரம் சாவதானமாகப் பேசிக் கொண் டிருந்தார்கள். ஆனல் அவர்கள் பேசிய விஷயம் பின்னல் நடக்கையால் வெளியாவதால் அதை யீண்டெழு தாது விடுக்கின்றனம்.

* * * * *

* * * *

மேற்கண்ட சம்பவங்கள் நடந்த அதேதினம் மாலை ஆத்மநாதம் பிரபுவின் மாளிகையில் மிக்க அழகாய் அலங் காரம் செய்யப்பட்ட ஒரு அறையில் அப்பிரபு, சீமாட்டி, குசலாம்பாள் ஆகிய மூவரும் உட்கார்ந்து சம்பாஷித்துக் கொண் டிருக்கிறுர்கள். குசலாம்பாள் வெளுப்படைந்த முகத்தோடு பலகீனமான நிலைமையி லிருக்கிறுள். ஏனெ னில் அவள் வியாதியுற்றிருந்து இரண்டொரு நாட்களா கவே சற்று சுகமடைந்து வீட்டில் நடமாடிக்கொண் டிருக்கிறுள்.

அவள் துஷ்டகேதுவால் அவனுடைய நாட்டு மாளிகையில் சிறைவைக்கப்பட் டிருந்தபோது வில்வநாதனால் அதிலிருந்து மீட்கப்பட்டா ளென்றும், பிறகு இருவரும் கொடிய தொத்து வியாதியால் பீடிக்கப்பட்ட கோரமான ஜனக்கூட்டத்தில் சிக்கிக்கொண்ட போது அவள் வில்வநாதனை விட்டுப் பிரிந்து விட்டா ளென்றும், அவன் மட்டும் மிக்க கஷ்டத்தோடு வீடுபோய்ச் சேர்ந்தானென்றும் கூறியிருந்தோமல்லவா. அச்சமயம் குசலாம்பாள் அச்சனக் கூட்டத்தில் சிக்கிக்கொண்டு மிக்க பயத்தால் வாய்திறந்து கூச்சலிடவும் முடியாத நிலைமையிலிருந்தாள். அவள் அந்த நிலைமையிலிருந்ததே அக்கூட்டத்தி லிருந்து தப்பித்துக் கொள்ள அனுகூலம் தந்தது. அவள் கூச்சலிடாம லிருந்ததால் அக்குழப்பத்தில் ஜனங்கள் அவளைக் கவனிக்கவில்லை. கவனித்திருந்தால் மோசமாகவே முடிந்திருக்கும். அவள் மிக்க கஷ்டத்தோடு நாலுவீதிகள் சந்திக்கும் ஒரு இடத்தில் செல்லும் போது மெதுவாய் ஒரு வீதியில் நுழைந்து தப்பித்துக் கொண்டு வீடுபோய்ச் சேர்ந்தாள். வீட்டிற்குள் நுழைந்தபோது அவள் முகத்திலிருந்த விகாரத் தோற்றத்தையும் வெறிகொண்டவள் போன்ற பார்வையையும் கண்ட அவள் தாயும் மற்றவர்களும் மிக்க பீதியும் துயருமடைந்தார்கள்.

குசலாம்பாள் தன் தாயாரைக் கண்டதும் அம்மா வென்றலறி மூர்ச்சையாய் வீழ்ந்துவிட்டாள். அவள்பிறகு கண் விழித்தபோது சுரம்கண் டிருந்ததோடு சன்னியால் ஸ்மரணை தப்பியிருந்தாள். உடனே வைத்தியர் வரவழைக்கப்பட்டு மிக்க ஜாக்கிரதையாக சிகிச்சைகள் செய்யப்பட்டன. ஒருவாரங்கழித்தே அவள் சுரம் நீங்கி புத்தி சுவாதீனம் பெற்றாள். ஆனால் நடந்த சங்கதிகளை விவரமாய்க்கூறக் கூடிய நிலைமையிலில்லை. ஆயினும் தன்னை யத்

கிரமமாய்ப் பிடித்துக்கொண்டு சென்றவன் துஷ்டகேது வென்றும், தான் ஒரு இரவு முழுதும் ஒரு தனியறையில் சிறைவைக்கப்பட் டிருந்ததாகவும், மறுநாட் காலை தனக்குத்தெரிந்த ஒரு வாலிபனால் தான் மீட்கப்பட்டதாகவும், பிறகு அச்சனக் கூட்டத்தில் அவ்வாலிபனும் தானும் சிக்கிக்கொண்டதாகவும், அவன் பெயர் தனக்குத் தெரியாதென்றும் ஒருவாறு கூறினாள்.

நேயர்களே! தன் புத்திரிக்குத் துஷ்டகேது அவ்வளவு துணிகரமாய் இத்தகைய அக்கிரமமான தீங்கிழைத்தான் என்பதைக் கேட்ட ஆத்மநாதம் பிரபுவின் மனதில் எத்தகைய உணர்ச்சிகள் உண்டாகி யிருக்கு மென்பதை நீங்களே சிந்தித்து அறியலாகும். அவர் கண்களில் அக்கினிச்சுவாலை வீசியது. அத்தகைய துஷ்டன்மேல் தக்கபடி வஞ்சம் தீர்த்துக்கொள்ளவேண்டு மென்று தனக்குள் தீர்மானித்துக் கொண்டார். ஆயினும் குசலாம்பாள் நன்ருகச் சுகமடைந்த பின் நடந்த சங்கதியாவும் விவரமாக அறிந்து கொண்டபின் அதைப்பற்றிச் சிந்திக்கலா மென்றிருந்தார். அன்று தான் அதைப்பற்றிப் பேசத்தொடங்கினர்கள். குசலாம்பாள் தன் தாய்தந்தையர் இருவரையும் நோக்கி,

தானும் தன் தோழிகளும் கோயிலிலிருந்து திரும்பி வரும்போது தான் பிடிக்கப்பட்டு மூர்ச்சை யடைந்ததையும், பிறகு விழித்துக்கொண்டபோது ஒரு மேல்மாடியில் தனியறையிலிருந்ததையும், துஷ்டகேது அங்குவந்து தன்னிடம் கூறிய வார்த்தைகளையும் மறுநாள் பலவந்தமாய்த் தன்னை மணம்புரிந்துகொள்ள எண்ணி யிருந்ததையும், அன்றிரவு தான் தனியே அந்த அறையில் பூட்டி வைக்கப்பட்டதையும் அப்போது தான் அனுபவித்த மனோவேதனையையும் யாவற்றையும் விபரமாய்க் கூறியபின், மறு

நாள் தான் முன் கண்டிருந்த ஒரு வாலிபன் தன்னைத் தற் செயலாய்க் கண்டான் என்று கூறும்போது அவள் மனதி லுண்டான ஒருவித உணர்ச்சியால் அவள் முகத்தில் நாண மும் ஒருவிதப் பிரகாசமும் தோன்றியன. பிரபு அதை யறிந்துகொள்ளவில்லை. ஆனால் குசலாம்பாளுடைய தாயார் அதை யுணர்ந்துகொண்டதால் அவள் மனதில் ஒருவிதச் சந்தேகம் உதித்தது.

பிரபு தன் புதல்வியை நோக்கி "அவ்வாலிபன் எவ் விதமாக உனக்கு அறிமுகமானான்?" என வினவினர். குசலாம்பாள் "தந்தையே! ஒருநாள் நான் அவனைத் தற் செயலாய்க் கோயிலில் சந்தித்தேன். அச்சமயம் என் கைக் குட்டை கீழே விழுந்துவிட அவ்வாலிபன் அதை யெடுத் துக்கொடுத்தான். பிறகு இரண்டொரு வார்த்தைகள் பேசியபின் இருவரும் பிரிந்துவிட்டோம். அதன் பிறகு சில நாட்கள் கழிந்தபின் மறுபடி கோயிலிலேயே அவ னைக்கண்டேன். அன்று அவன் என்னை மீட்டபோது நான் அவனைச் சந்தித்தது மூன்றும்முறை. அவனுடைய பெயராவது, இருப்பிடமாவது, அவன் யார் என்ன என் பதைப்பற்றியாவது எனக்கு ஒன்றுமே தெரியாது. அவனும் என்னைப்பற்றி ஒருவிவரமும் கேட்கவில்லை." என்று கூறியபின், அவ்வாலிபன் துஷ்டகேதுவோடு யுத் தம் புரிந்து அவனை வீழ்த்திவிட்டு, வீட்டிற்குள் தனியா கவே புகுந்து வந்து தான் சிறைவைக்கப்பட்டிருந்த அறையின் கதவையுடைத்துத் தன்னை யழைத்துக் கொண்டு வெளியில் வந்ததையும், அப்போது துஷ்டகேது வும் அவன் ஆட்கள் இருவரும் தங்களைத் துரத்தி வந்த தையும் கூறி,

"அப்பா! அப்போதுதான் அவ்வாலிபன் தன் இடுப் பில் தொங்கவிட்டிருந்த ஒரு பொன் ஊதுகுழலை யெடுத்து

ஊதினன். உடனே நான்குபேர் ஆயுதந்தரித்த வீரர்கள் அதிதுரிதமாக அங்கு வந்தார்கள். அவர்களில் ஒருவன் தலைவன்போ லிருக்கிறுன். அவன் தன் சிரசணியில் இறகுகள் சொருகிக்கொண்டிருக்கிறுன். அவனைப் பார்த்து அவ்வாலிபன் "ஆ! தலைவரே! வந்தனம்" என்று கூறினன்" என்றுள். பிரபு அத்தலைவனுக்கு வயது என்ன விருக்கும்? எப்படி யிருக்கிறுன்?" என்றுர்.

குசலாம்பாள், "தந்தையே! வயது எப்படியோ நான் நன்ருய்க்கவனிக்கவில்லை. அவன் மிக்க பலசாலியாய், கம்பீரமும் அதிகாரப் பார்வையுங்காட்டும் தோற்றமுடையவனுய், விசாலம்பொருந்திய கண்களை யுடையவனுக விருக்கிறுன்......" என்றதே பிரபு துரிதமாய் "ஆள் உயரம், நீளமாகவும் உயரமாகவுமுள்ள நாசி, அழகிய பற்கள், நீண்டகரங்கள், அழகான ஆள்....." என்றதே, குசலாம்பாள் "ஆம் ஆம் அவனே, உமக்கெப்படியப்பா அந்த ஆள் தெரியும். எப்போதேனும் பார்த்திருக்கிறீர்களோ? உமக்கு அறிமுகமான ஆள்தானே?" வென்று ஆவலோடு கேட்டாள்.

ஆனல் பிரபுவோ அவள் கூறியவற்றைக் கேட்டதே ஓர்வித மனச்சோர்வடைந்தவர்போல் "சரி அவனே! அவன் புகைப்படத்தைப் பார்த்திருக்கிறேன். அவன் மாயசிங்கனுகவே யிருக்கவேண்டும்" என்றுர். இதைக் கேட்டதே குசலாம்பாள் மனதில் பெரிய இடிவிழுந்தது போலாய்விட்டது. ஏனெனில் தான் அன்புவைத்திருக்கும் அவ்வாலிபன் கள்ளக்கூட்டத்தைச் சேர்ந்தவனே வென்ற அய்யமுண்டாயிற்று. அதற்குள் பிரபு உனக்கு உதவிசெய்ய வந்தவர்கள் கள்ளர்களே. பெரும்பாலும் அவ்வாலிபன் கள்ளக்கூட்டத்தைச் சேர்ந்தவனுகவே யிருக்கவேண்டும்" என்றுர்.

இம்மொழிகளைக் கேட்ட குசலாம்பாள் மனம் சகிக்காமல் "அப்பா! அந்த வாலிபனு? ஒருகாலும் கள்ளரில் சேர்ந்தவனு யிருக்கமாட்டான்; அத்தகைய காருண்யமும், பரோபகாரமும், மரியாதையும், பெருந்தன்மையுமுடைய வாலிபன் கள்ளனுய் ஒருகாலும் இருக்கமாட்டான். வெளிக்கு அப்படித் தோன்றுவதற்கு ஏதோ காரணம் இருக்கவேண்டும். அவனுடைய மரியாதையான சம்பாஷணையையும், அடக்கத்தையும், சுத்தவீரத்தன்மையையும் நோக்க அவன் உயர்குடியிற் பிறந்தவனுகவே யிருக்கவேண்டும்" என்று ஆத்திரத்தோடு கூறினுள்.

இம்மொழிகளைக் கேட்டதே பிரபுவிற்கும் "இவள் அவன்மேல் காதல் கொண்டிருக்கிருள்" என்று மனதிற் பட்டது. சீமாட்டி தனக்குண்டாகிய சந்தேகம் உண்மையென்று எண்ணிக்கொண்டாள். பிரபு சாந்தமாகவே "குழந்தாய்! அவன் உனக்குச் செய்த இத்தகைய பெரிய உதவிக்கு நான் அவனைமட்டும் சந்தித்தால் அவனுக்குத் திருப்தியுண்டாக்கத்தக்க பரிசளிப்பேன். ஆயினும் நீ அவனைச் சந்திப்பதும் பேசுவதும் இதோடே அடியோடு நின்றுவிடவேண்டும். நீ பிறந்த குலத்தின் பெருமைக்கும் கௌரவத்திற்கும் தக்க நடையினின்றும் நீ தவிரமாட்டாயென்று நான் பூரணமாய் நம்புகிறேன்" என்றுர்.

கன்னிகை:—"தந்தையே! நான் அப்படி என் குலத்தின் கௌரவத்திற்கு ஊனத்தை யுண்டாக்கும் வண்ணம் ஒருபோதும் ஒழுகேன். ஆயினும் அவ்வாலிபனுடைய நடக்கையைப்பற்றி விசாரித்து உண்மையறியா முன்னர் அவனைப்பற்றி அகௌரவமாய்க் கருதி விடமாட்டீர்களென்று நம்புகிறேன்" என்றுள்.

32-வது அத்தியாயம்

பகிரங்கவிளம்பரம்—போர் செய்யும் அரங்கம்—முதல்நாள் நடக்கும் சம்பவங்கள்—துஷ்டகேதுவுக்கும் இராகவனுக்கும் யுத்தம்—இராணியின் கலக்கம்—துஷ்டகேது தோல்வி யடைதல்—வேவு ஆள் டாக்டரிடம் இரகசியத்தை வெளியிடல்—டாக்டரின் வாய்ப் பதட்டம்-புண்ணியகோடிப் பிரபுவின் பொறுமையும் சித்திராங்கியின் சிந்தனையும்.

மேல் அத்தியாயத்தில் கூறியபடி ஆத்மநாதம் பிரபுவும் மற்ற இருவரும் சம்பாஷித்துக்கொண்டிருக்கையில் வீதியில் பறையறையும் சத்தம் கேட்டதும் மூவரும் எழுந்து சாளரத்தினருகிற்போய் நின்று வீதியை நோக்கினார்கள்.

வீதியில் இராஜாங்கத்தில் பறை யறையும் ஒருவனும், கொடி முதலிய வற்றைத் தாங்கிய நாலைந்து பேர்களும், அவர்கள் பின்னால் சுமார் நூறுஜனங்களும் வந்துகொண்டிருந்தார்கள். பறையறையும் ஆள் பிரபுவின்மாளிகையெதிரில் வந்ததும் நின்று பறை யறைந்து விட்டுக் கீழ்க்கண்டபடி கெட்டியாய்க் கூறினான்.

"இதனால் யாவர்க்கும் பகிரங்கமாய்த் தெரிவிப்பதாவது: சுத்த வீரராகிய இராகவப்பிரபு இராணியின்மேல் குற்றங் கூறுகிறவர்களோடு யுத்தம் செய்வதாய்க் கூறியபடி, நாளை முதல் மூன்று நாட்கள் எவரோடும் யுத்தம் செய்ய ஆயத்தமாக விருப்பார். அந்த யுத்தம் நகரத்தின் வடபாலிருக்கும் வெளிப் பிரதேசத்தில் நடக்கும்."

இவ்வாறு மூன்றுமுறை கூறிவிட்டு வீதியின் கோடிக்குச் சென்றான். இவ்விஷயத்தைக்கேட்டதே ஆத்மநாதம்

5491
690 005

ஸ்ரீமான் ஆரணி குப்புசாமி முதலியாரவர்கள் இயற்றியது.-

கனகபூஷணம்.

(இது ஓர் கற்புடைய உத்தமியின் அதிசயமான கதை.)

இதில் கற்பிலக்கணம் விவரமாய் உலக அனுபவத்தோடு விளக்கிக் காட்டப்பட்டிருக்கிறது. இக்கதாநாயகி தனக்கு நேரிடும் மிக்க பயங்கரமான அனேக இக்கட்டுகளிலிருந்து தன் கற்புக்குப் பழுதுவராமல் தப்பித்துக்கொள்வது மிக்க சோகத்தையும் ஆச்சரியத்தையும் தரும். அதோடு இதில் இவ்விதமான நடவடிக்கைகளும், அவைகளாலுண்டாகும் நன்மை தீமைகளும் தெளிவாய்க் கூறப்பட்டிருப்பதால், இது வாசிப்பவர்களுக்குச் சகலவித நற்குணங்களையும் போதிக்கக்கூடியதென்பது உண்மை. ஆண்பாலர்; பெண்பாலரிருவர்க்கும் வேண்டிய சகல புததிமதிகளும் இதில் அடங்கியிருக்கின்றன. இது முழுதும் உலக வழக்கத்தையும் அனுபவமான ஆசாரத்தையும் ஒட்டி எழுதப்பட்டிருக்கிறது.

முதல்பாகம் ரூ. 1—12—0 2-ம் பாகம் ரூ. 1—12—0

இரத்தினபுரி இரகசியம்.

ஓர் அற்புதமான தமிழ் நாவல்.

இதில் மிக்க ஆச்சரியமும் நெஞ்சு திடுக்கிடக்கூடியவையும், ஆதிமுதல் அந்தம் வரையில் மனதைக் கவரக்கூடியவைகளுமான சம்பவங்கள் நிறைந்துள்ளன. பலவித நடவடிக்கைகளையுடைய பாத்திரங்களுமிருப்பதால், அநேக நீதிகளும், புத்திமதிகளும் தக்க திருட்டாந்த பூர்வகமாக நிரூபிக்கப்பட்டிருக்கின்றன.

நமது சிறுவர், சிறுமிகளும், ஸ்திரீகளும் அவசியமாய் உணர வேண்டிய இலௌகீக ஆசார விஷயங்களைப்பற்றி ஆங்காங்கு விளக்கிக் கூறப்பட்டிருக்கிறது. இதன் இனிமையும் அருமையும் வாசிப்போர்களால் முன்னமே புகழ்ந்து கூறப்பட்டிருக்கின்றன. ஆதலால் இதைப்பற்றி நாம் அதிகமாய்க் கூறவேண்டுவதில்லை. இதில் எல்லா ரசங்களும் பூரணமா யிருக்கின்றனவென்று கூறுகிறோம்.

முதல் பாகம் ரூ. 1—12—0 2-ம்பாகம் ரூ. 2—4—0

ஆனந்தபோதினி ஆபீஸ், சௌகார்பேட்டை மதராஸ்

"ஆனந்தபோதினி"

ஓர் இனிய மாதாந்தத் தமிழ்ச் சஞ்சிகை.

இச்சஞ்சிகை 1915ஸு ஜூலை மீ முதல் சென்னையில் பிரசுரிக்கப்பட்டு வருகிறது. தற்காலம் குன்றியிருக்கும் நமது தமிழ்ப் பாஷையின் அபிவிர்த்தியையும், நமது நாட்டாருடைய இலௌகீக ஆசார ஒழுக்கங்களின் சீர்திருத்தத்தையும், ஆன்மார்த்த ஞானபிவிர்த்தியையும், பெண் கல்வியையும் நோக்கமாய்க் கொண்டே இச்சஞ்சிகை பிரசுரிக்கப்பட்டு வருகிறது. பிரதிசஞ்சிகையிலும், மேற்கண்ட விஷயங்களோடு, நமது சிறுவர், சிறுமிகளுக்கும், ஸ்திரீகளுக்கும் அவசியமான நீதிகளும், புத்திமதிகளும் காணலாம். எல்லா விஷயங்களும் உலக அனுபவமுடைய கல்வியாளரால் வரையப் படுகின்றன. இவையன்றி ம-ள-ள-ஸ்ரீ ஆரணி குப்புசாமி முதலியாரவர்களால் மிக்க நேர்த்தியான புது நாவல்களும் தொடர்ச்சியாய் எழுதப்பட்டு வருகின்றன. இப்போது இது நமது நாட்டில் பிரசுரிக்கப்படும் எல்லாத் தமிழ்ச் சஞ்சிகைகளையும் விட அதிகமான சந்தாதாரரையுடையது. இது ஜாதிமத பேதமின்றி ஒவ்வொரு மாணவனும், புருடனும், ஸ்திரீயும் அவசியம் வாசிக்கத்தக்கது. இது நமது நாட்டாரது நன்மையொன்றைமட்டும் கருதியே பிரசுரிக்கப்படுவதால், டெம்மி 8 பக்கம் அளவில், 40 பக்கம் விஷயங்களுள்ள இச்சஞ்சிகைக்குத் தபாற்கூலி யுள்பட வருட சந்தா 1 ரூபாதான் ஏற்படுத்தப்பட் டிருக்கிறது. பினாங்கு, ஸிங்கப்பூர் முதலிய வெளிநாடுகளுக்கு ரூபா 1-4-0. மாதிரி காப்பி வேண்டுவோர் 1 அணா ஸ்டாம்பு அனுப்பிப் பெற்றுக்கொள்ளவும்.

ஸ்ரீமான் ஆரணி குப்புசாமி முதலியார் இயற்றிய நாவல்கள்.

	ரூ.	அ.		ரூபா	
இரத்தினபுரி இரகசியம் 2-பாகமும் ...	4	0	தினகரசுந்தரி	1	0
கற்கோட்டை ...	2	0	பத்மாஸனி ...	0	14
மின்சார மாயவன் ...	1	8	வீரநாதன் ...	0	12
தேவசுந்தரி ...	1	4	குணசுந்தரன் ...	0	12
கனகபூஷணம் 2-பாகமும் ...	3	8	மஞ்சள் அறையின் மர்மம்	1	8
சுவர்ணாம்பாள் ...	0	12	கமலசேகரன் ...	1	12
ஆனந்தஸிங் ...	2	0	பூங்கோதை ...	0	10
மதனபூஷணம் ...	1	0	இந்திராபாய் ...	2	8
ஸ்ரீ ராமகிருஷ்ண பரம ஹம்ஸருடைய சரித்திர உபதேசங்கள்	1	12	அமராவதி 2 பாகமும்	4	0
			சகோதரவாஞ்சை	0	6
			ஹை ஸ்கூல் படிப்பு ...	0	7

விலாசம்: மானேஜர், "ஆனந்தபோதினி" ஆபீஸ், நெ. 6, வெங்கடேச மேஸ்திரி வீதி, சௌகார்பேட், மதராஸ்.

Printed at the "Ananda Bodhini" Press Madras